# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Performance Report

# 2011

අධ්‍යාපන අමාත්‍යාංශය கல்வி அமைச்சு Ministry of Education



# வருடாந்த அறிக்கை - 2011

## கல்வி அமைச்சு

இவ் வருடாந்த அறிக்கை அரச நிதி சுற்றறிக்கை இல. 402 இன் 2 1.4 வாசகத்துக்கு அமைய கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது.

2012 ஜுன்

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

**கல்வி அமைச்சு**

**கல்வி அமைச்சர்**

கௌரவ பந்துல குணவர்தன அவர்கள்

**பிரதி கல்வி அமைச்சர்**

கௌரவ விஜித் விஜிதமுனி சொய்சா அவர்கள்

**மேற்பார்வை உறுப்பினர்**

கௌரவ மொஹான்லால் ஹிரேரோ

**செயலாளர்**

திரு. கோடபய ஜயரட்ண அவர்கள்

**நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு**
மேலதிக செயலாளர் - திரு.என்.எச்.எம். சித்ரானந்த
பிரதம கணக்காளர் - திரு. பீ.ஏ.கே. ஜயசிங்க
**தாபனம் மற்றும் நிர்வாகம் (இணைந்த சேவைகள் அல்லாத)**
**ஒழுக்காற்று மற்றும் புலனாய்வு**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் -திரு. பீ.எச்.ஏ. விமலவீர
**தாபனம் மற்றும் நிர்வாகம் (இணைந்த சேவைகள்) மற்றும்**
**காணிக் கிளை**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - திருமதி. ஆர்.பீ. கங்கேவெல
**பாராளுமன்றச் செயற்பாடுகள் மற்றும் போக்குவரத்துக் கிளை**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - திருமதி. ஏ.பீ. குருகே
**நிதிக் கிளை**
கணக்காளர் - திருமதி. எஸ்.பீ.என். சமரசிங்க
**பல்வகைக் கணக்குக் கிளை**
கணக்காளர் - திரு. ஜே.கே.எஸ்.என். பெரோ
**கொடுப்பனவுக் கிளை**
கணக்காளர் - திருமதி. கீதா ஹேமந்தி ரூபசிங்க
**ஓய்வூதிய சம்பளக் கிளை**
கணக்காளர் - திரு. வை.எம்.எஸ். குணசேகர
**வழங்கல் கிளை**
கணக்காளர் - திருமதி. ஓ.பீ.ஆர்.தமயந்தி

**கல்வி பண்புசார் விருத்திக் கிளை**
மேலதிக செயலாளர் - திரு.எச்.யூ. பிரேமதிலக
**அழகியற் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. டப்ளியூ.பீ.என்.டீ. குணதிலக
**விவசாயம் மற்றும் சுற்றாடல் கற்கைக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - செல்வி. பீ.எல்.டீ. பாலசூரிய
**இரட்டை மொழிக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. பிரியத்தா நாணயக்கார
**பாட இணை வழிகாட்டல் மற்றும் ஆலோசனையும்,**
**சமாதானக் கல்வியும்**
கல்விப் பணிப்பாளர் - திரு. ஏ.டீ.எம்.டீ. பண்டார
**வர்த்தகக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. எம். கமனி பெரேரா

**கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனைச் சபை**
செயலாளர் - திரு. விஜித வெலகெதர
**ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. பீ.எம்.வீரசூரிய
**தகவல் மற்றும் தொடர்புசாதன தொழிநுட்பக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. பீ.எம்.நீல் குணதாச
**கணிதக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. விஜேதாச கேவாபத்திரண
**முகாமைத்துவம் மற்றும் தரப் பிரிவு**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. எஸ்.எம்.எல்.கே. செவனவிரட்ண
**தேசிய மொழி மற்றும் மானிடக் கல்வி சாஸ்திரக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. எஸ்.எல்.எம்.டீ. பியசேன
**முறைசாரா மற்றும் விசேட கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. எச்.பீ.என். லக்ஷ்மன்
**தேசிய பாடசாலைக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. ஜீ.என். சில்வா
**தோட்டப் பாடசாலை அபிவிருத்திக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. எம். சபாரஞ்சன்
**ஆரம்பக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திருமதி. பீ.எம்.ஏ.எஸ். பண்டிதசேகர
**சமயம் மற்றும் விழுமியக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. எஸ்.பீ.எம். நிமல்தர்மசிறி
**விஞ்ஞானக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. எம்.பீ. விபுலசேன
**பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்குக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - செல்வி. ரேணுகா பீரிஸ்
**பாடசாலை செயற்பாட்டுக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு.டப்.கே.டப். விஜேதுங்க
**விளையாட்டு மற்றும் உடற்கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு.எம்.டீ.ஆர். கருணாரட்ண
**தமிழ் மொழி மூல பாடசாலைக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. எஸ். முரளிதரன்
**முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - ஜனாப். இஸட். தாஜுடீன்
**புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டம்**
செயற்றிட்டப் பணிப்பாளர் - திரு.எல்.ஆர்.வீ. குணரட்ண
**தொழிநுட்பக் கல்விக் கிளை**
கல்விப் பணிப்பாளர் - திரு. ஏ.டீ. நந்தசேன

**கல்வி சேவைத் தாபனம்**
**கல்விச் சேவைத் தாபனக் கிளை மற்றும் அதிபர் கிளை**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - திருமதி. ஏ.டீ.எஸ்.சதீகா
**ஆசிரியர் இடமாற்றப் பிரிவு**
கல்விப் பணிப்பாளர் - ஜனாப். பீ. சலாகுதீன்
**ஆசிரிய கல்விக் கிளை**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - திரு. ஆர்.டீ.எம்.பீ. வீரதுங்க
**ஆசிரிய கல்வியியலாளர் சேவை**
உதவிச் செயலாளர் - திரு.ஜே.கே. அத்துகொரல

**பாடசாலை வழங்கல், சேவை மற்றும் நிர்மாணிப்பு**
மேலதிக செயலாளர் - திரு. அனுர திசாநாயக்க
**கட்டிட முகாமைத்துவக் கிளை**
கட்டிட முகாமையாளர் - திரு. ஏ.எச்.எச்.கே. வீரக்கோண்

**பெறுகைக் கிளை**

சிரேஷ்ட உதவிச் செயலாளர் - திருமதி. தீப்திகா குணரட்ண
கணக்காளர் -திரு. துணில் கெய்யந்தொடுவ

**பாடசாலை கட்டிடக் கிளை**

பணிப்பாளர் -திருமதி. ஐ.எம்.பெர்னாந்து

**பாடசாலை வழங்கல் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திரு. பீ.டீ.சீ. வியன்வெல

**பாடசாலை வழங்கல் பிரிவு**

கணக்காளர் - திரு. துணில் கெய்யந்தொடுவ

**திட்டமிடல் செயற்சாதனை அடைவு மட்ட மீளாய்வுப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. எஸ்.யூ. விஜேரட்ண

**ஆசிரிய கல்வி மற்றும் கல்விக் கல்லூரிக் கிளை**

பிரதம ஆணையாளர் (ஆசிரியர் தாபனம்) - திரு. திஸ்ஸ கேவாவிதாரண

**புள்ளிவிபர முகாமைத்துவ மற்றும் ஆராய்ச்சிக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திரு. டப்.எஸ். பெரேரா

**சகலருக்கும் கல்வி மற்றும் மிலேனிய அபிவிருத்தி இலக்குக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. வீ.பீ. விதானகே

**வெளிநாட்டு நிறுவன மற்றும் செயற்பாட்டுக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திரு. எல்.ரீ. லால் பத்மசிறி

**மனிதவள அபிவிருத்திக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. புஸ்பா விஜேசூரிய

**மேற்பார்வை மற்றும் வினைத்திறன் மீளாய்வுக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. லலனி என் விஜேசேகர

**பிரிவெனாக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - சங்கைக்குரிய வலஸ்வெவே குணரட் தேரர்

**கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. எம்.எம். வெகெல்ல

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. சீ.எம்.பீ.ஜே. திலகரட்ண

**வட மாகாண கல்வி அபிவிருத்தி இணைப்புப் பிரிவு**

கல்விப் பணிப்பாளர் - ஜனாப். ஏ.எம்.எப். றாபி

**சட்டப் பிரிவு**

சட்ட உத்தியோகத்தர் - செல்வி. சுரங்கி பெரேரா

**பாடசாலை நூலக அபிவிருத்திக் கிளை**

கல்விப் பணிப்பாளர் -திரு. அனுர ஜயலத் டீ சில்வா

**புள்ளிவிபரக் கிளை**

சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் - திரு. கே.எம்.டீ.எஸ்.டீ. கருணாரட்ண

**ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளை**

கல்விப் பணிப்பாளர் - திருமதி. பீ.ஆர்.பீ. சில்வா

**அறிழவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டம் (EKSP)**

செயற்றிட்டப் பணிப்பாளர் - திரு. அனுர திசாநாயக்க

**ஜேர்மன் ஒத்துழைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (GIZ)**

செயற்றிட்டப் பணிப்பாளர் -திரு. எஸ். முரளிதரன்

**இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை**

செயலாளர் நாயகம் -திரு. ஆர்.பீ. பெரேரா

**கணக்காய்வு**

அரச கணக்காய்வுக் கிளை

கணக்காய்வு அத்தியட்சகர் -திருமதி. டப்.என்.பீ. மெனிக்கே

**உள்ளகக் கணக்காய்வுக் கிளை**

கணக்காளர் - திருமதி. வீ.ரீ.கே. அதிகாரி

# உள்ளடக்கம்


## அத்தியாயம் 1 : கல்வி அமைச்சு தொடர்பான சுருக்கம்

1.1. கல்வி அமைச்சின் பணிகள்
1.2. கல்வி அமைச்சின் இணைந்த நிறுவனங்கள்
1.3. பாடசாலைகள் தொடர்பான அடிப்படைப் புள்ளிவிபரங்கள் - 2010

## அத்தியாயம் 2 : அபிவிருத்தியின் முன்னேற்றங்கள்

2.1. புதிய கல்விச் சட்டங்கள்
2.2. 5000 ஆரம்பப் பாடசாலைகளுக்கான 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம்
2.3. மாதிரி இடைநிலைப் பாடசாலைகள் - மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, பிட்டிபன, ஹோமாகம
2.4. தேசிய பரீட்சைகளில் மாணவர் அடைவு மட்டத்தை மேம்படுத்தல்
2.5. தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டித் தொடர்களில் பெற்றுக்கொண்ட வெற்றிகள்

## அத்தியாயம் 3 : கல்விச் செலவினம்

3.1. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் - 2011
3.2. கல்விக்காக வெளிநாட்டு உதவி முதலீடுகள்
- 3.2.1. உலக வங்கி உதவி வழங்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்
- 3.2.2. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பெறும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள்
- 3.2.3. யுனிசெப் உதவி வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்
- 3.2.4. ஏனைய நிறுவனங்கள் மூலம் உதவி வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

3.3. கல்வி அமைச்சினால் உள்நாடு மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களுடன் 2011 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகள்
- 3.3.1. நனச கல்வித் தொலைக்காட்சி
- 3.3.2. இணையப் பாடசாலைகள் வேலைத்திடடம்
- 3.3.3. கல்வி முகாமைத்துவத்திற்கான தகவல் தொழிநுட்ப வசதிப் பயன்பாடு
- 3.3.4. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திகள்
- 3.3.5. 'Partners in Learning' – மைக்குரோசொப் வேலைத்திட்டத்தின் உதவி வேலைத்திட்டங்கள்
- 3.3.6. "Intel World Ahead
- 3.3.7. 'Oracle Think Quest'ஒரக்கல் ஒத்துழைப்பு உதவி

## அத்தியாயம் 4 :கல்விப் பிரவேசம் மற்றும் பங்கேற்பை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்

4.1. கட்டாயக் கல்விக் கோவைகளை அமுல்படுத்தல்
4.2. பாடசாலை சீருடை வழங்கல்
4.3. பாடசாலை பாடநூல் வழங்கல்
4.4. புலமைப்பரிசில் வழங்கல்
4.5. பாடசாலையின் மதிய உணவு வேலைத்திட்டங்கள் மற்றும் சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள்

## அத்தியாயம் 5 : மனிதவள வளங்கள் மற்றும் அபிவிருத்தி

5.1. ஆசிரியர்கள்
- 5.1.1. ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு
- 5.1.2. தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கல்விக் கல்லூரிகளில் மேற்கொள்ளும் தாபன ஆசிரியர் பயிற்சிகள்
- 5.1.3. தொடர்ச்சியான ஆசிரியர் கல்வி

5.2. கல்வி அபிவிருத்தி முகாமைத்துவத் தலைமைத்துவம்
5.3. உயர் தரத்திலான ஆசிரியர்களை உருவாக்குவதற்கான ஆசிரிய கல்வியியலாளர் சேவை

## அத்தியாயம் 6 : பௌதீக வசதிகளை வழங்குதல்

6.1. கட்டிட நிர்மாணிப்பு
6.2. கற்றல் உபகரணங்களை வழங்குதல்

## அத்தியாயம் 7 :கல்வித் துறைசார் அபிவிருத்திப் பிரவேசம் மற்றும் கல்வியின் நோக்கத்தினை எட்டுதல்

7.1. 2012 - 2016 நடுத்தரக் கால திட்டங்களை வகுத்தல்
7.2. ஆரம்பக் கல்விக்கான பிரவேசம்
7.3. கல்வியின் மாணவர் பங்கேற்பு
7.4. ஆரம்பக் கல்விச் சுற்றினைப் பூரணப்படுத்தல்
7.5. ஆசிரியர்களின் நிலைமைகள்
7.6. கற்றல் பயன்களின் நிலைமை

## அத்தியாயம் 8 :கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

8.1. ஆரம்பக் கல்வி
8.2. சமய மற்றும் விழுமியக் கல்வி
8.3. பிரிவெனாக் கல்வி
8.4. தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழிநுட்பக் கல்வி
8.5. கணிதக் கல்வி
8.6. விஞ்ஞானக் கல்வி
8.7. தேசிய மொழி மற்றும் மானிட சாஸ்திரக் கல்வி
8.8. ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிக் கல்வி
இரட்டை மொழிக் கல்வி
8.10. விவசாய மற்றும் ஊழல் கல்வி
8.11. அழகியற் கல்வி
8.12. வர்த்தகம் மற்றும் வர்த்தக் கற்கை
8.13. விளையாட்டு மற்றும் உடற்கல்வி
8.14. பாட இணை வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வேலைத்திடடங்கள்
8.15. பாடசாலை நூலக அபிவிருத்தி
8.16. ஊட்டல் கல்வியின் மூலம் "சகலருக்கும் கல்வி" சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்
8.17. தேசிய பாடசாலை அபிவிருத்தி
8.18. வட மாகாணக் கல்வி அபிவிருத்தி
8.19. தோட்டப் பாடசாலை அபிவிருத்தி
8.20. முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி
8.21. தமிழ் மொழி மூல பாடசாலை அபிவிருத்தி
8.22. முறைசாராக் கல்வி
8.23. விசேட கல்வி

## அத்தியாயம் 9 : கல்வியின் பண்புசார் விருத்தி மற்றும் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தல்

9.1. பாடசாலை மதிப்பீடு மற்றும் மேற்பார்வை
9.2. கல்வி ஆராய்ச்சி
9.3. கல்வியின் முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS)

## அட்டவணைகளும் வரைபடங்களும்

அட்டவணை 1.3.1.: பாடசாலை எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை மாகாணங்களுக்கு அமைய

அட்டவணை 1.3.2.: வகைகளுக்கு அமைய பாடசாலைப் புள்ளிவிபரம்

அட்டவணை 1.3.3.: கற்பித்தல் மொழி மூலத்திற்கமைய பாடசாலைப் புள்ளிவிபரம்

அட்டவணை 1.3.4.: மாகாணங்களுக்கமைய பிரிவெனா எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை

அட்டவணை 1.3.5.: தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை

அட்டவணை 2.2.1.: மாணவர் எண்ணிக்கை - 50 ஐ விடக் குறைந்த மற்றும் 2500 ஐ விட மேற்பட்ட பாடசாலை எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் 2003 - 2010

அட்டவணை 2.2.2.: மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த பாடசாலைகளின் ஆசிரிர், மாணவர் எண்ணிக்கை மற்றும் மாணவர், ஆசிரியர் விகிதாசாரம்

அட்டவணை 2.2.4.: பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே 1AB பாடசாலைப் பரம்பல் - 2010

அட்டவணை 2.2.5.: க.பொ.த. (உ.த.) பாடவிதானத்துக்கு அமைய மா்ணவர் எண்ணிக்கை - 2010
அட்டவணை 2.2.6.: அபிவிருத்தி செய்வதற்கான இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை மாகாணங்களுக்கு அமைய - 2011.12.31 ஆந் திகதியன்று

அட்டவணை 3.1.1.: மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மைய செலவினம் (மீண்டெழும்) - 2011
அட்டவணை 3.1.2.: மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மைய செலவினம் (மூலதனம்) - 2011
அட்டவணை 3.1.3.: அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் சுருக்கம்
அட்டவணை 3.2.1.: வெளிநாட்டு முதலீடுகள் - 2011
அட்டவணை 5.1.1.: ஆசிரியர் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்

வரைபடம் 5.1.1.: அரச பாடசாலைகளில் ஆசிரியர்களின் அபிவிருத்தி 2005 - 2010
அட்டவணை 5.1.2: மாவட்டங்களுக்கமைய மொத்த மாணவர் ஆசிரியர் விகிதாசாரம்
அட்டவணை 5.2.1.: இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களின் தேவை மற்றும் தற்போதுள்ள எண்ணிக்கை
அட்டவணை 7.2.1.: 5 - 11 வயது மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம்

அட்டவணை7.3.1.: ஆரம்பக் கல்விக்காக தேறிய மற்றும் மொத்த ஆவணங்கள் விகிதாசாரத்திற்கமைய
வரைபடம் 7.3.1.: ஆரம்பக் கல்வியின் மொத்த ஆவணப்படுத்தப்பட்ட விகிதாசாரம் 1996 - 2006
அட்டவணை 7.4.1.: மாணவர் நிலைத்து நிற்கும் விகிதாசாரம் - 2008
அட்டவணை 7.5.1.: ஆசியர் பெற்றுக்கொண்ட உயர் கல்வித் தகைமைக்கமைய விகிதாசாரம்

அட்டவணை 7.6.1.: 5ம் தரத்தின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா.த.) பரீட்சை மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் மாணவர் அடைவு மட்டம்

அட்டவணை 7.6.2.: ஆரம்பப் பிரிவின் நான்காம் தரத்தில் மாணவர்கள் கற்பது தொடர்பான தேசிய மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள அடைவு மட்டங்கள் 2003 - 2009
அட்டவணை 7.6.3.: கனிஷ்ட இடைநிலைப் பிரிவின் 8ம் தரத்தின் மாணவர்களின் கற்றல் தொடர்பாக தேசிய மதிப்பீடுகள் காண்பிக்கப்பட்ட அடைவுமட்டங்கள் 2005 - 2009
வரைபடம் 7.6.1.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கட்டாயப் பாடங்களில் மாணவர் அடைவுமட்டம் 2008 - 2011
அட்டவணை 7.6.4.: க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மாணவர் அடைவு மட்டப் பாடங்கள் மற்றும் மொழிக்கமைய
அட்டவணை 8.1.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தகவல் தொழிநுட்பப் பாடத்தின் அடைவு மட்டம் 2008 - 2011
வரைபடம் 8.1.: க.பொ.த. (சா.த.) கணிதப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்
வரைபடம் 8.2.: க.பொ.த. (சா.த.) விஞ்ஞானப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்
வரைபடம் 8.3.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் சித்தியடைந்த விகிதாசாரம் - 2011

# அத்தியாயம் 1 :
# கல்வி அமைச்சு தொடர்பான சுருக்கம்

***நோக்கு***

*இலங்கையின் அடையாளத்தின் பங்களார்களாக திறமை வாய்ந்த பிரஜைகள் ஊடாக சர்வதேச சமூகத்தின் அதிசிறந்த நிலையை எட்டுதல்.*

***பணிக்கூற்று***

*பங்காளர் தரப்பினை திருப்திப்படுத்தக் கூடியவாறான வினைத்திறன் மற்றும் உயர் பண்பசார் தரத்தின் ஊடாக கல்வியின் நவீன மயப்படுத்தப்பட்ட மற்றும் நவீன பிரவேசங்கள் ஊடாக சர்வதேச தரங்களுக்கு அமைவாக திறமை வாய்ந்த பிரஜைகளை உருவாக்குதல்.*

## 1.1 கல்வி அமைச்சின் பணிகள்

- தேசிய நோக்கு, அபிலாசைகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக கல்வியின் அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல், மதிப்பீடுகள், முன்னேற்ற மீளாய்வுகள் மற்றும் மேற்பார்வைகள்.

- கல்வி அபிவிருத்திக்காக தர நிர்ணயம் மற்றும் அத்தரங்களைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆக்கத்திறன் மிக்க வேலைத்திட்டங்களை ஊக்குவித்தல்.

- கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் நிர்வாக முகாமைத்துவப் பணிகளை விரிவாகப் பேணுவதற்கு மாகாணப் பொறுப்பாளர்களுடன் சிறந்த இணைப்பை ஏற்படுத்தல்.

- உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளுடன் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வை.

- கற்றல் உபகரணங்கள், பாடசாலைக் கட்டிடம் மற்றும் தளபாடங்களுக்கான அளவு மற்றும் தரங்களை வகுத்தல்.

- சகல மாணவர்களுக்கும் பாடசாலைச் சீருடைகளை வழங்குதல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் திறமைமிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.

## 1.2 கல்வி அமைச்சின் இணைந்த நிறுவனங்கள்

- மாகாணக் கல்வித் திணைக்களம்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- இலங்கை பரீட்சைத் திணைக்களம்
- தேசிய கல்வி நிறுவகம்
- தேசிய நூலக மற்றும் சுவடிக் கூடச் சேவைச் சபை
- இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை
- இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை

## 1.3 பாடசாலைகள் தொடர்பான அடிப்படைப் புள்ளிவிபரங்கள் - 2010

**அட்டவணை 1.3.1.: பாடசாலை எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை மாகாணங்களுக்கு அமைய.**

| மாகாணம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேற்கு | 1338 | 915,872 | 40,460 |
| மத்தி | 1466 | 522,293 | 30,629 |
| தெற்கு | 1099 | 504,171 | 29,357 |
| வடக்கு | 840 | 239,633 | 13,417 |
| கிழக்கு | 1003 | 385,506 | 20,301 |
| வடமேல் | 1218 | 472,836 | 27,219 |
| வடமத்தி | 780 | 254,464 | 14,720 |
| ஊவா | 839 | 277,116 | 18,243 |
| சப்ரகமுவ | 1102 | 368,181 | 21,726 |
| **இலங்கை** | 9685 | 3,940,072 | 216,072 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

**அட்டவணை 1.3.2.:வகைகளுக்கு அமைய பாடசாலைப் புள்ளிவிபரம்**

| வகை | 1AB | 1C | வகை 2 | வகை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பாடசாலை எண்ணிக்கை | 716 | 2,005 | 4,094 | 2,870 | 9,685 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

**அட்டவணை 1.3.3.:கற்பித்தல் மொழி மூலத்திற்கமைய பாடசாலைப் புள்ளிவிபரம்**

| மொழி | சிங்களம் | தமிழ் | சிங்களம் மற்றும் தமிழ் | சிங்களம் மற்றும் ஆங்கிலம் | தமிழ் மற்றும் ஆங்கிலம் | சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை | 6,390 | 2,783 | 45 | 327 | 106 | 34 | 9,685 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

**அட்டவணை 1.3.4.: மாகாணங்களுக்கமைய பிரிவெனா எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை**

| மாகாணம் | பிரிவெனாக்களின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேற்கு | 146 | 14,145 | 1,327 |
| மத்தி | 103 | 7,639 | 725 |
| தெற்கு | 157 | 12,817 | 1,341 |
| வடக்கு | 1 | 271 | 20 |
| கிழக்கு | 22 | 1,226 | 128 |
| வடமேல் | 95 | 8,805 | 842 |
| வடமத்தி | 55 | 4,268 | 432 |
| ஊவா | 72 | 6,181 | 605 |
| சப்ரகமுவ | 79 | 7,509 | 709 |
| **இலங்கை** | **720** | **62,861** | **6,129** |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2011*

**அட்டவணை1.3.5.:தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை**

| மாகாணம் | விசேட பாடசாலைகள் உட்பட தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை | | | மாணவர் எண்ணிக்கை | மொத்த ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | கட்டணம் அறவிடப்படும் | கட்டணம் அறவிடப்படாத | மொத்தம் | | |
| மேற்கு | 30 | 24 | 54 | 87,511 | 4,317 |
| மத்தி | 6 | 6 | 12 | 11,761 | 668 |
| தெற்கு | 11 | 2 | 13 | 6,697 | 356 |
| வடக்கு | 4 | 2 | 6 | 8,659 | 349 |
| கிழக்கு | 1 | 0 | 1 | 30 | 7 |
| வடமேல் | 3 | 0 | 3 | 958 | 94 |
| வடமத்தி | 1 | 1 | 2 | 215 | 23 |
| ஊவா | 2 | 3 | 5 | 1,381 | 154 |
| சப்ரகமுவ | 2 | 0 | 2 | 150 | 26 |
| **இலங்கை** | **60** | **38** | **98** | **117,362** | **5,994** |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*



ஆசிரியர் கௌரவிப்பு விழா

2011 அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழா





பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்காக சமய ஆசிர்வாத நிகழ்ச்சிகள்

# அத்தியாயம் 2 :
# அபிவிருத்தியின் முன்னேற்றங்கள்

## 2.1 புதிய கல்விச் சட்டங்கள்

கலாநிதி பீ.பீ. குணவர்தன குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை யோசனைத் தொடர் கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்தன அவர்களின் தலைமையிலான விசேட ஆலோசனைக் குழு மூலம் தொடர்ந்தும் ஆராயப்பட்டது. இக்குழுவினால் அமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக விரவுரையாளர்கள், நிபுணத்துவ வைத்தியர்கள், சமயத் தலைவர்கள், கல்வி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலரின் கருத்துக்கள் பெறப்பட்டு புதிய கல்விச் சட்ட வரைவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2.2 5000 ஆரம்பப் பாடசாலைகளுக்கான 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம்

- **அறிமுகம் மற்றும் பின்னணி**

கல்வித் துறையில் எமது தேசம் பெற்றுள்ள பல விசேட வெற்றிகளுக்கு மத்தியில் நாம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினையாக அமையவிருப்பது கிராமிய பாடசாலைகள் மூடப்படல் மற்றும் நகரப் பாடசாலைகளுக்கு கூடுதலான மாணவர்கள் வருகை தருவதுமாகும். இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதற்கு கல்வி பண்புசார் விருத்தியின் பின்னடைவுகள் காரணமாக அமைந்துள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை, வளங்களைப் பகிர்வின் சமமின்மை, பண்புசார் கற்றல் செயற்பாடுகளில் பின்னடைவுகள் ஆகிய பிரச்சினைகள் இந்நிலைமை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளதுடன் இப்பிரச்சினைகளுக்கு துரித தீர்வு காண வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

**அட்டவணை 2.2.1.: மாணவர் எண்ணிக்கை - 50 ஐ விடக் குறைந்த மற்றும் 2500 ஐ விட மேற்பட்ட பாடசாலை எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் 2003 - 2010**

| | 2003 | | 2007 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் |
| மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த | 1437 | 14.7 | 1533 | 15.8 | 1552 | 16.0 |
| மாணவர் எண்ணிக்கை 2500 ஐ விட மேற்பட்ட | 141 | 1.4 | 167 | 1.7 | 187 | 1.9 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

**அட்டவணை 2.2.2.: மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த பாடசாலைகளின் ஆசிரிர், மாணவர் எண்ணிக்கை மற்றும் மாணவர், ஆசிரியர் விகிதாசாரம்**

| பாடசாலை எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த ஆசிரிய எண்ணிக்கை | மொத்த பாடசாலை எண்ணிக்கை விகிதாசாரமாக | இப்பாடசாலைகளின் ஆசிரிய மாணவர் விகிதாசாரம் | மொத்த பாடசாலை-லகளின் ஆசிரிய மாணவர் விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 1,552 | 43,753 | 8,080 | 16 | 5:1 | 18:1 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

இப்பிரச்சினைக்குரிய நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்காக கலாநிதி சீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரா அவர்கள் அறிமுகப்படுத்திய இலவசக் கல்வியின் பயனை சகல சிறார்களுக்கும் சமமாக அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவும், இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலை வலையமைப்பில் தற்போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் காலம் கடத்தாது மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாக மாற்றம் பெற்றுள்ளது. மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஐம்பெரும் கேந்திர அபிவிருத்தி உபாயங்கள் ஊடாக அறிவின் கேந்திரத்தின் அடிப்படையில் எதிர்காலத்துக்குப் பொருத்தமான மாணவர் பரம்பரையினரை உருவாக்கும் வகையில் சகல வசதிகளுடனும் கூடிய ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் அதற்கு இணைவாக 5000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சினால் புதிய வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- **வேலைத்திட்டத்தின் நோக்கம்**

கோளமய கிராமத்தின் செயற்பாட்டு பிரஜைகளாக மாற்றம் பெறத் தேவையான அறிவு, திறமைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை வழங்கி சகல சிறார்களுக்கும் பண்புசார் கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கான சம சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தல்.

- **நோக்கம்**

i. முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தற்போதைய பிரச்சினைகளைத் தீர்த்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் நாட்டில் முதலாவது தரம் கொண்ட 9,314 பாடசாலைகளில் 2,149 இற்கு 2010 ஆம் ஆண்டில் மாணவர்கள் 10 ஐ விடக் குறைவான எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஒரு மாணவரேனும் சேராத 306 பாடசாலைகளில் உள்ளன. அத்துடன் 10 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட 4,131 பாடசாலைகள் உள்ளன. அவ்வாறாயின் சகல பாடசாலைகளிலும் ¾ இல் முதலாம் தரத்தில் 40 ஐ விடக் குறைந்த மாணவர்கள் உள்ளனர். இதேவேளை 1ம் தரத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 200 ஐ விட மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 170 ஆகும். ஆரம்பப் பாடசாலை வலையமைப்பினை விருத்தி செய்து இவ்வாறு குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட மூடப்படும் பாடசாலைகளை சிறந்த முறையில் பாதுகாப்பதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

### அட்டவணை 2.2.3.: 1ம் தரத்திற்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டவாறான பாடசாலைகளின் எண்ணிக்கை

| முதலாம் தரத்தில் மாணவர் எண்ணிக்கை | பாடசாலைகளின் எண்ணிக்கை | விகிதாசாரம் |
|---|---|---|
| **0** | 306 | 3.3 |
| **1-9** | 2149 | 23.0 |
| **10-40** | 4531 | 48.6 |
| **41-200** | 2158 | 23.1 |
| **200ට වැඩි** | 170 | 1.8 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

**ii. க.பொ.த. (உ.த.) விஞ்ஞானக் கல்வியைக் கற்பதற்காக புலமைப்பரிசிலுக்குச் சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் தெளிவுபடுத்தப்படுவது. எந்தவொரு 1AB பாடசாலையிலும் (க.பொ.த. (உ.த.) விஞ்ஞான பாடவிதானம் கொண்ட வகுப்புக்கள் இல்லாத 72 பிரதேச செயலகங்கள் நாட்டில் உள்ளன. ஒரு 1AB பாடசாலை அல்லது இரு பாடசாலைகள் கொண்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை 157 ஆகும். இதற்கமைய நாட்டின் 1AB பாடசாலைகளின் பரம்பல் பிரதேச ரீதியில் சமமற்ற நிலையில் காணப்படுவது தென்படுகிறது. புதிய வேலைத்திட்டத்திற்கு அயை குறைந்தபட்சம் சகல வசதிகளையும் கொண்ட மூ ன்று இடைநிலைப் பாடசாலைகளையேனும் ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்குள் அடங்கக் கூடியவாறு சகல பிரதேச செயலகப் பிரிவுகளையும் தழுவக் கூடியவாறான செயற்பாடுகளை அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

## அட்டவணை 2.2.4.: பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே 1AB பாடசாலைப் பரம்பல் - 2010

| பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 1AB பாடசாலைகளின் எண்ணிக்கை | பிரதேசப் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஒன்றேனும் இல்லாத 1AB பாடசாலைகள் | 72 |
| ஒன்று மாத்திரம் உள்ள1AB பாடசாலைகள் | 100 |
| 2 மாத்திரம் உள்ள 21AB பாடசாலைகள் | 57 |
| 3 மாத்திரம் உள்ள 31AB பாடசாலைகள் | 30 |
| 4 மாத்திரம் உள்ள 41AB பாடசாலைகள | 25 |
| 5 - 10 இற்கிடைப்பட்ட 1AB பாடசாலைகளின் | 36 |
| 11 - 23 இற்கிடைப்பட்ட1AB பாடசாலைகள் | 04 |
| **மொத்தம்** | **324** |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010*

2.2.5.அட்டவணைக்கமைய க.பொ.த. (உ.த.) விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவகளின் மொத்த மாணவர் விகிதாசாரம் மொத்தமாக க.பொ.த. (உ.த.) மாணவர் எண்ணிக்கைக்கு இணைவாக47.7% ஆகும். மாணவர்கள் 52.3% கலைத் துறையிலேயே கல்வி பயிலுகின்றனர். தற்போதைய கோளமய தேவைகளுக்கு அமைய விஞ்ஞானம் மற்றும் வர்த்தகத் துறைசார்ந்த பரம்பரையை உருவாக்குவதற்காக அத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் விகிதாசாரத்தை குறைந்தபட்சம் 75% ஏனும் அதிகரிப்பதே கல்வி அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

**அட்டவணை 2.2.5.: க.பொ.த. (உ.த.) பாடவிதானத்துக்கு அமைய மா்ணவர் எண்ணிக்கை - 2010**

| மாகாணம் | க.பொ.த. கற்கும் மாணவர் விகிதாசாரம் | | |
|---|---|---|---|
| | *விஞ்ஞானம்* | *வர்த்தகம்* | *கலை* |
| மேற்கு | 27.2 | 36.2 | 36.6 |
| மத்தி | 20.3 | 25.2 | 54.5 |
| தெற்கு | 27.5 | 23.0 | 49.5 |
| வடக்கு | 18.5 | 15.1 | 66.4 |
| கிழக்கு | 17.2 | 17.5 | 65.3 |
| வடமேல் | 20.0 | 20.7 | 59.3 |
| வடமத்தி | 19.0 | 21.3 | 59.7 |
| ஊவா | 17.2 | 21.6 | 61.2 |
| சப்ரகமுவ | 22.1 | 23.2 | 54.7 |
| **மொத்தம்** | 22.5 | 25.2 | 52.3 |

***மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2010***

iii. பாடசாலை இடைவிலகலை தடுத்தல்

எமது பாடசாலை முறைமையில் 9ம் தரம் வரையில் நிலைத்து நிற்கும் மாணவர் எண்ணிக்கை விகிதாசாரத்திற்கு அமைய 89% பெண்களும்93% ஆண்களும் அடங்குகின்றனர். மொத்தமாக 9% மாணவர்கள் கட்டாயக் கல்வியைப் பூர்த்தி செய்யும் முன்னர் பாடசாலையில் இருந்து இடைவிலகுவதாகத் தென்படுகிறது. க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குப் பின்னர் பாடசாலையை விட்டு விலகும் மாணவர் எண்ணிக்கை வருடாந்தம் 177,000 ஆகும். அத்துடன் க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குப் பின்னர் உயர்தரக் கல்வி பெறாது பாடசாலையை விட்டு விலகும் எண்ணிக்கை வருடாந்தம் சுமார் 86,000 ஆகும். க.பொ.த. (சா.த.) இற்கு முன்னர் பாடசாலையில் இருந்து விலகுவதை தடுப்பதற்கும் க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) இற்குப் பின்னர் மேலதிகக் கல்விக்காக தகைமை பெறாத பாடசாலையில் இருந்து இடைவிலவோரை விரிவான தொழிற்பயிற்சிக்கு ஈடுபடுத்துவதற்கும், இடைநிலைப் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களை வகுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்**
  - **அட்டவணை 2.2.6.: அபிவிருத்தி செய்வதற்கான இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை மாகாணங்களுக்கு அமைய - 2011.12.31 ஆந் திகதியன்று**

| மாகாணம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|
| **மாகாணம்** | ***தேசிய பாடசாலை*** | ***மாகாணப் பாடசாலை*** | ***மொத்த இடைநிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கை*** | ***ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை*** |
| மேற்கு | 18 | 117 | 135 | 539 |
| மத்தி | 33 | 123 | 156 | 395 |
| தெற்கு | 39 | 96 | 135 | 506 |
| வடக்கு | 12 | 113 | 125 | 474 |
| கிழக்கு | 18 | 110 | 128 | 395 |
| வடமேல் | 19 | 109 | 128 | 379 |
| வடமத்தி | 8 | 74 | 82 | 470 |
| ஊவா | 28 | 67 | 95 | 351 |
| சப்ரகமுவ | 22 | 93 | 114 | 504 |
| **மொத்தம்** | **197** | **902** | **1,098** | **4,013** |

***மூலம் - கல்வி அமைச்சு***

கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றால் கூட்டாக இணைந்து மேற்கொள்ளப்பட்டஆய்வுகளுக்கு அமைய பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இது தொடர்பாக பிரதேச அரசியல் பொறுப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் மற்றும் சமூகத்தை அறிவுறுத்துவதற்காக பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுக்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் உலக வங்கி 100 மில்லியன் அமெரிக்க டொலரையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இவ்வேலைத்திட்டத்திற்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. 1000 அதிபர்கள் மற்றும் 3000 ஆசிரியர்களை இப்பாடசாலைகளில் சேவையாற்றுவதற்காகச் சேர்த்துக் கொள்ளத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. இவ்வதிபர்களுக்கு விசேட தலைமைத்துவப் பயிற்சியும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.3 மாதிரி இடைநிலைப் பாடசாலைகள் - மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, பிட்டிபன, ஹோமாகம

ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் 2011 ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியை இடைநிலைப் பாடசாலையாக புதிய வடிவமைப்பில் ஆரம்பித்தமை, இலங்கைக் கல்வியின் திருப்பு முனையாகச் சுட்டிக்காட்ட முடிகிறது. சம்பிரதாய பாடசாலைகளைப் போலன்றி நாளாந்தம் பி.ப. 3.30 வரை பாடசாலை நடைபெறுவது இப்பாடசாலையின் விசேட அடையாளம் ஆகும். இக்காலத்துக்குள் பாடத்தினைப் போன்று பாட இணைச் செயற்பாடுகளும் மாணவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடுதலான திறமைகளைக் காண்பித்த மாணவர்கள் மற்றும் பாட இணைச் செயற்பாடுகளில் விசேட திறமையைக் காண்பித்த மாணவர்களாகும். இப்பாடசாலைக்காக 15 மில்லியன் ரூபா பெறுமதியாக பஸ் வண்டி ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கலாநிதி இத்தோ கியோ உள்ளிட்ட நலன்விரும்பிகள் குழுவினால் வழங்கப்பட்டதை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

## 2.4 தேசிய பரீட்சைகளில் மாணவர் அடைவு மட்டத்தை மேம்படுத்தல்

- 5ம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சை கல்வி அமைச்சு பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து மாணவர்களுக்கு சுமையற்றவாறு புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பரீட்சையை ஆரம்பப் பருவத்தின் இறுதி ஆண்டின் மாணவர் மதிப்பீடாகப் பயன்படுத்தி 70 புள்ளிகளை விட மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக 2007 ஆம் ஆண்டில 58.7% ஆகக் காணப்பட்ட 70 புள்ளிகளை விடக் குறைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் 64.9% வரை அதிகரித்தது.

- க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சை கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கக் காரணமாக அமைந்தது.

  * மாதிரி வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்குதல்.
  * கட்டாயப் பாடங்களுக்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் மாதிரி விடைகளையும் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குதல்.
  * க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்துவதற்கான கருத்தரங்குகளை நாடெங்கும் நடாத்துதல்.
  * பரீட்சை வினாத்தாள்களைத் தயாரித்து புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
  * மாணவர்களில் குறைந்த அடைவு மட்டத்தைக் காண்பிக்கும் விஞ்ஞானம் மற்றும் கணிதம் போன்ற பாடங்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக விசேட வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

இச்செயற்பாடுகளின் பயனாக க.பொ.த. (சா.த.) சித்தியடைந்த விகிதாசாரம் 2007 ஆம் ஆண்டில் 51.5% இலிருந்து 2011 ஆம் ஆண்டில் 60.8% வரை அதிகரித்தது. க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த விகிதாசாரம் 2007 ஆம் ஆண்டில் 61.4% இலிரந்து 2010 ஆம் ஆண்டில் 61.6% வரையான அதிகரிப்பைக் காண்பிக்கிறது.

## 2.5 தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டித் தொடர்களில் பெற்றுக்கொண்ட வெற்றிகள்

2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டித் தொடர்களில் விசேட திறமைகளைக் காண்பிக்க எமது மாணவ மாணவியருக்கு முடிந்தது. 6 மற்றும் 7ம் தரங்களுக்காக காண்பிக்கப்பட்ட சர்வதேச விஞ்ஞான மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டியில் 7 வெண்கலப் பதக்கங்களை எமது மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். 8, 9, 10 ஆம் தரங்களுக்காக நடாத்தப்பட்ட சாத்வதேச கணித போட்டிகளில் தனிப்பட்ட போட்டிகளில் 2 வெண்கலப் பதக்கங்களையும் குழுப் போட்டிகளில் 2வது இடத்தையும் எமது நாடு பெற்றுக்கொண்டது. பிலிப்பைனில் இடம்பெற்ற கனிஷ்ட விஞ்ஞான மற்றும் கணித ஒலிம்பியாட் போட்டித் தொடரில் விசேட திறமைகளைக் காண்பித்து இரண்டு தங்கப் பதக்கங்கள், ஏழு வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ள எமது மாணவர்களுக்கு முடிந்தது.



2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஹோமாகம பிட்டிபன மஹிந்த ராஜபக்ச கல்லூரி

**இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள்**



அன்று



தி/ அக்ரபோதி மகா வித்தியாலயம்

அனு/ கெப்பட்டிகொல்லாவ மத்திய கல்லூரி



இன்று



# அத்தியாயம் 3 :
# கல்விச் செலவினம்

## 3.1 மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் - 2011

கல்வி அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் உண்மையான மீண்டெழும் செலவினம் 24.9 மில்லியன் ரூபா என்பதுடன் இதற்கான ஒதுக்கீடு 25.7 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன் சிறியளவு தொகை எஞ்சியதற்குக் காரணம் செலவினங்களைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட பல்வேறுபட்ட நடவடிக்கைகள் ஆகும். மூலதனச் செலவினத்தைக் கருத்திற்கொள்ளும் போது அதற்கான ஒதுக்கீடான 5.3 மில்லியன் ஆகும். செலவு செய்யப்பட்ட 4.2 மில்லியன் ரூபா என்பதுடன் 1.1 மில்லியன் ரூபா எஞ்சியது. இதற்குப் பிரதான காரணம் கட்டுநிதியை விடுவிக்கும் போது ஏற்பட்ட தாமதம் ஆகும். செலவினம் தொடர்பான விபரங்கள் 3.1.1. மற்றும் 3.1.2. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1.1.: மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மை செலவினம் (மீண்டெழும்) - 2011**

| குறியீடு | செயற்றிட்டம் | மொத்த ஒதுக்கீடு - 2011 | உண்மையான செலவினம் - 2011 |
|---|---|---|---|
| 1. | *நிர்வாக வேலைத்திட்டங்கள்* | | |
| | அமைச்சு அலுவலகம் | 54,378,886 | 47,887,033 |
| | நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் | 464,359,503 | 453,923,941 |
| 2. | *அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்* | | |
| | ஆரம்பக் கல்வி | 2,894,569,000 | 2,888,804,713 |
| | இடைநிலைக் கல்வி | 10,794,696,700 | 10,737,162,413 |
| | விசேட கல்வி | 2,966,915,000 | 2,936,396,793 |
| | வழங்கல்கள் மற்றும் உதவி | 6,975,450,041 | 6,595,984,569 |
| | திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 16,695,000 | 5,795,670 |
| | ஆசிரியர் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கோட்பாடு | 1,231,161,300 | 971,783,155 |
| | உண்மையான கல்வியின் பண்புசார் விருத்திக்கான தாபன உதவிகள் | 311,700,000 | 294,532,000 |
| | **மீண்டெழும் செலவினங்களின் மொத்தம்** | **25,709, 925,430** | **24,932,270,287** |

*மூலம் - கல்வி அமைச்சு*

**அட்டவணை 3.1.2.: மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மைய செலவினம் (மூலதனம்) - 2011**

| குறியீடு | செயற்றிட்டம் | மொத்த ஒதுக்கீடு - 2011 | உண்மையான செலவினம் - 2011 |
|---|---|---|---|
| 1. | *நிர்வாக வேலைத்திட்டங்கள்* | | |
| | அமைச்சு அலுவலகம் | 28,576,180 | 23,951,579 |
| | நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் | 109,037,838 | 71,881,444 |
| 2. | *அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்* | | |
| | ஆரம்பக் கல்வி | 377,850,000 | 273,142,064 |
| | இடைநிலைக் கல்வி | 1,821,097,523 | 1,262,627,907 |
| | விசேட கல்வி | 30,920,949 | 18,631,688 |
| | ஆசிரியர் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கோட்பாடு | 119,445,434 | 80,578,478 |
| | பொதுக் கல்வியின் பண்புசார் விருத்திக்கான தாபன உதவிகள் | 31,000,000 | 26,603,000 |
| | *அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்* | 2,860,352,475 | 2,491,470,737 |
| | ***மூலதன மொத்தம்*** | **5,378,280,399** | **4,248,886,897** |
| | **மீண்டெழும் மற்றும் மூலதனங்களின் மொத்தம்** | **31,088,205,829** | **29,181,157,184** |

*மூலம் - கல்வி அமைச்சு*

**அட்டவணை 3.1.3.: அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் சுருக்கம்**

| விபரங்கள் | ஆரம்ப நிலுவை | சகல | ஆண்டின் கடன் | 2011.12.31 ஆந் |
|---|---|---|---|---|
| உண்மையான | 1,862,139,299.34 | 716,245,158.56 | 801,533,164.07 | 1,776,851,293.83 |
| பரிந்துரை செய்யப்பட்ட எல்லை | ……. | 721,500,000.00 | 710,000,000.00 | 2,300,000,000.00 |

*மூலம் - கல்வி அமைச்சு*

## 3.2 கல்விக்காக வெளிநாட்டு உதவி முதலீடுகள்

2011 ஆம் ஆண்டில் நேரடியாக கல்விக்காக கல்வி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவி முதலீடு 2039 மில்லியன் ரூபாவாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டம் ஊடாக கணிசமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உலக வங்கியின் கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக 2வது மிகப்பெரிய முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு உதவி முதலீடுகள் தொடர்பான விபரங்கள் 3.2.1. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2.1.: வெளிநாட்டு முதலீடுகள் - 2011**

| மூலம் | வேலைத்திட்டங்கள் | வருடாந்த முதலீடு - 2011 ரூ. மில். |
|---|---|---|
| உலக வங்கி | கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்களுக்கான வழங்கல்கள் | 133.0 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டங்கள் | 1867.0 |
| யுனிசெப் | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 14.0 |
| ஜீ.ஐ.இஸட். | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 10.5 |
| யுனெஸ்கோ | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 11.7 |
| சேவ் தீ சில்றன் | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 2.8 |
| **மொத்தம்** | | **2039.0** |

*மூலம் - கல்வி அமைச்சு*

## 3.2.1 உலக வங்கி உதவி வழங்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

- போசாக்கு மற்றும் சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் மாணவர் முகாம்களை நடாத்துதல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களைப் பயிற்சியளித்தல்.
- ஆங்கிலக் கல்விக்கான தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.
- பிரதேச ஆங்கில வள மத்திய நிலையங்களுக்கான உபகரணங்களை வழங்குதல்.
- தகவல் தொடர்புசாதன தொழிநுட்பப் பாடத்திற்குரிய பயிற்சிகள் மற்றும் கொள்ளளவு விருத்தி.
- முறைசாராக் கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் தொழிலாளர்களின் கொள்ளளவு விருத்தி.
- இரட்டை மொழியல்லாத ஆசிரியர்களை இரட்டை மொழி ஆசிரியர்களாகப் பயிற்றுவித்தல்.
- பயிற்றப்படாத பட்டதாரிகளுக்கு பயிற்சியளித்தல்.
- கல்வித் தரங்கள் மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பாக அதிபர்களை அறிவுறுத்தல்.
- பாடசாலை வெளி மதிப்பீடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- பாடசாலை நூலகப் பயன்பாடு தொடர்பாக அதிபர்கள், ஆசிரிய நூலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- பாடசாலைகளின் பௌதீக வசிதகள் தொடர்பான ஆய்வுகள்.
- கணித ஆசிரியர்களின் கேத்திர கணித அறிவினை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்.
- கணித ஆசிரியர்களின் கற்றல் முறைகளை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள்.
- க.பொ.த. (உ.த.) பாடவிதானத்தின் பிரச்சினையை இனங்காண்பதற்கான வேலைத்திட்டங்கள்.
- பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை வழங்குதல்.
- தேசிய விஞ்ஞானக் கல்வியில் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.
- ஆரம்பப் பாடசாலைகளுக்கு பல்லூடகக் கற்றல் முறைகளை அறிமுகப்படுத்தல்.
- தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.

## 3.2.2 ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பெறும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள்

### *(a) 1000 இடைநிலைப் பாடசாலை வேலைத்திற்குள் உட்படும் 104 பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்*

- 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 104 பாடசாலைகளை வறுமைச் சுட்டியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டள்ளது. ஒரு பாடசாலைக்கு 35 மில்லியன் ரூபா வீதம் செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், காணப்படும் கட்டிடங்களைப் பழுதுபார்த்தல், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் தளபாடங்கள் உட்பட விஞ்ஞான உபகரணங்களை விநியோகிக்க நிதி செலவிடப்படுகிறது.

- 2011 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட 15 பாடசாலைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பளிக்கப்படுவதுடன் மேலும் 20 பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன.
- 65 இடைநிலைப் பாடசாலைகளுக்குத் தேவையான கணினி, தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவது பூர்த்தி செய்யப்பட்டன.

### (b) மேற்கொள்ளப்பட்ட ஏனைய பணிகள்

- தொழிற் பயிற்சிப் பாடநெறியைக் கற்கும் 5000 மாணவர்களில் ஒரு மாணவருக்கு 10,000 ரூபா வீதம் புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- 425 பாடசாலைக் கணினி மத்திய நிலையங்களைத் தாபித்தல்.
- கணினி சார்ந்த கற்கை / சர்வதேச கணினி செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் (CAL/ICDL) தொடர்வதற்காக 3600 ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கல்.
- சர்வதேச சமூகஞ்சார் தகவல் தொழிநுட்ப அனுமதிப் பத்திரம் (IPICT) கற்பதற்காக 5000 ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- E-citizen 3440 புலமைப்பரிசில்கள் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்குதல்.

### 3.2.3 யுனிசெப் உதவி வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

- உள்ளீட்டுக் கல்விக்கான உபகரணத் தொகுதிகளின் மேற்பார்வை மட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- கிராமியப் பாடசாலைகளுக்கு நீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல்.
- எழுத்தறிவு ஆலோசகர்களின் கொள்ளளவு விருத்தி மற்றும் முறைசாராக் கல்விக்கான கற்கை உபகரணங்களை வகுத்தல்.
- ஆசிரியர் கல்விக்கான சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் சிந்தனைகளை உள்ளடக்குதல்.
- மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களின் கொள்ளளவு விருத்தி.

### 3.2.4 ஏனைய நிறுவனங்கள் மூலம் உதவி வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

| | |
|---|---|
| **யுனெஸ்கோ** | உள்ளீட்டுக் கல்விக்கான ஆரம்ப ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் மொடியூல் மற்றும் ஈ-கற்கை பொதியைத் தயாரித்தல். |
| **ஜீ.ஐ.இஸட்** | கணித ஆசிரியர்களின் கொள்ளளவு விருத்தி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வேலைத்திட்டங்கள் |
| **சேவ் தி சில்ரன்** | தேசிய மொழி மற்றும் மானிடக் கலை கல்விக்குரிய திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் |
| **பிளான் சிறிலங்கா** | 6ம் தர கணித மீளூட்டல் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் |
| **டீ.எப்.சீ.சீ. வங்கி** | பாடசாலை உற்பத்தித் திறன் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல். |

## 3.3 கல்வி அமைச்சினால் உள்நாடு மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களுடன் 2011 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

### 3.3.1 நனச கல்வித் தொலைக்காட்சி

டயலொக் கம்பனி மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் நனச தொலைக்காட்சி வேலைத்திட்டத்தின் ஒளிபரப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்பாட்டின் கீழ் 2011 ஆம் ஆண்டில் 1000 பாடசாலைகளுக்கு வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் அன்டனாக்கள் டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

### 3.3.2 இணையப் பாடசாலைகள் வேலைத்திடடம்

இலத்திரனியல் கற்கை முறைகளைப் பயன்படுத்தி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையே பிரபல்யப்படுத்தலும், அதற்கான பாதுகாப்பு இணையத்தள வசதிகளை அவர்களுக்கு வழங்குவதும் நோக்கமாகும்.

கூட்டுறவு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, எடிசலாட் நிறுவனம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. எடிசலாட் நிறுவனத்தினால் வழங்கப்படும் வசதிகளைப் பயன்படுத்தி பாடசாலைப் பாடவிதானத்துடன் இணைந்த இலத்திரனியல் கற்கையுடன் உள்ளடங்கலான பிரவேசத்திற்கு இதன் கீழ் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. இச்செயற்றிட்டத்தின் ஊடாக கல்வி அமைச்சிற்கு பாடவிதானம், உடன்படிக்கை, மாதிரி வினாத்தாள்கள், ஆசிரிய கையேடுகள், மதிப்பீட்டுத் தொகுதிகள் உள்ளிட்ட சகல தகவல்களையும் இலகுவில் மற்றும் துரிதகதியில் விநியோகிக்க முடியும்.

### 3.3.3 கல்வி முகாமைத்துவத்திற்கான தகவல் தொழிநுட்ப வசதிப் பயன்பாடு

கொரிய அரசின் குவாஞ்சு மொட்ரோபொலிட்டன் கல்வி நிறுவனத்தினால் கல்வி முகாமைத்துவத்திற்கான தகவல் தொழிநுட்பத்தை விருத்தி செய்ய கல்வி அமைச்சுக்கு உதவ இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வுடன்படிக்கையில் அடங்கும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

- 2011 ஆம் ஆண்டில் ஆரம்பித்து நான்கு வருடங்கள் கடக்க முன்னர் 50 கணினிகள் வீதம் வழங்குதல்.
- முகாமைத்துவத் தகவல் முறைமைக்காக வளவாளர்களைப் பயிற்றுவித்தல்.
- தகவல் தொழிநுட்ப ஆசிரியர்களுக்காக விசேட பயிற்சி வழங்குதல் மற்றும் அனுசரணை வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

### 3.3.4. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திகள்

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (கொய்கா) மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கான 500 மில்லியன் ரூபா நிதி வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 13 வகுப்பறைகள் மற்றும் 12 ஆசிரிய இல்லங்களை நிர்மாணிக்கும் பணிகளும் இதில் அடங்கியுள்ளன.

### 3.3.5 'Partners in Learning'– மைக்குரோசொப் வேலைத்திட்டத்தின் உதவி வேலைத்திட்டங்கள்

- ஆக்கத்திறன் மிக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்குனர் மென்பொருள் போட்டி

  வெற்றிகரமான கற்றல் கற்பித்தல் முறைகளுக்காக தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே புத்தாக்குனர் தகவல் தொழிநுட்ப தேர்ச்சியினை மேற்கொள்ள வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை எட்டுவதற்காக மைக்குரோசொப்ட் கம்பனி இம்மென்பொருள் போட்டியை நடாத்தியுள்ளது.

- புத்தாக்குனர் பாடசாலை வேலைத்திட்டங்கள்

  உயர் மட்டத்திலான கல்விக்காக மாணவர்களுக்கு உதவும் பங்காளர்களை இனங்காணல் மற்றும் கற்பதற்கான தொழிநுட்பம் மற்றும் தேவையான சூழலை உருவாக்க இவ்வேலைத் திட்டத்தின் மூலம் பாடசாலைக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

- ஈ - கிராமங்களுக்கான ஒத்துழைப்புக்கள்

  ஈ - கிராமங்களின் இளைஞர்களுக்கு தொழிலைக் கேந்திரமாகக் கொண்ட கைத்தொழில் சார்ந்த பாடவிதானங்களைத் தயாரித்து பயிற்சியளிப்பதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

- மல்டிபொய்ன்ட் தொழிநட்ப 1250 ஆய்வுகூட வேலைத்திட்டங்கள்

  எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குள் மைக்குரோசொப்ட் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் மல்டிபொய்ன்ட் வகுப்பறைகளுக்கு பிரவேசிப்பதற்கான செயற்றிட்டங்கள் இதன் கீழ் கிராமியப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன்.

### 3.3.6 "Intel World Ahead "வேலைத்திட்டம் - இன்டெல் வேலைத்திட்ட இன்டெல் ஒத்துழைப்பு உதவி

- "இன்டெல் டீச்" பயிற்சி வேலைத்திட்டம்
- கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக தொழிநுட்ப வினைத்திறனைப் பயன்படுத்த ஆசிரியர்களை ஈடுபடுத்துவதன் மூலம் நடவடிக்கை எடுத்தல்.
- "இன்டெல் டீச்" பாடசாலை விருது வலயப் போட்டித் தொடர்

- இப்போட்டித் தொடர் மூலம் தொழிநுட்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தல், ஆக்கத்திறன் மிக்க மற்றும் புதிய சிந்தனைகளுக்கு அமைய அதிசிறந்த முன்னேற்றங்களைக் காண்பிக்கும் பாடசாலைகளுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இலங்கை விஞ்ஞான மற்றும் பொறியியல் விற்பனை நிலையங்களும் கண்காட்சிகளும் / ஆண்டின் கனிஷ்ட ஆக்கங்கள்
- தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை பொறியியல் நிறுவகம் மற்றும் இன்டெல் நிறுவகத்துடன் இணைந்து இலங்கை விஞ்ஞான மற்றும் பொறியியல் விற்பனைக் கூடங்கள் மற்றும் கண்காட்சிகள் நடாத்தப்படுவதுடன் இதன் நோக்கம் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கிடையே புத்தாக்குனர் உருவாகுவதை ஊக்குவிப்பதாகும். இதன் போது தேசிய மட்டத்திலான வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்து சர்வதேச போட்டிகளைப் பிர-திநித்துவப்படுத்தச் சமர்ப்பித்தல்.
- School.lk இணையத்தளம் ஊடாக இலக்க கல்வி உள்ளடக்கங்கள்
- இதன் மூலம் விஞ்ஞானம் / கணிதத் துறையின் திறமை வாய்ந்த ஆசிரியர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக கற்றல் வழங்களை உருவாக்குவதற்கும், இணையத்தளம் ஊடாக பிரவேச வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.3.7 'Oracle Think Quest'ஒரக்கல் ஒத்துழைப்பு உதவி

- Think Quest பயிற்சி வேலைத்திட்டங்கள்

இவ்வேலைத்திட்டம் 49 நாடுகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கூட்டான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் ஒத்துழைப்பு வேலைத்திட்டம் ஆகும். வகுப்பறைப் பாடவிதானங்களை தொடர்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்கள் மற்றும் திட்டங்கள் கொண்ட கற்றல் செயற்றிட்டங்களை வகுக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.

- Think Quest சர்வதேசப் போட்டி

திங் குவெஸ்ட் செயற்றிட்டம், டிஜிட்டல் ஊடகம் மற்றும் உள்ளீட்டு அபிவிருத்திகள் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் தொழிநுட்ப இணையத்தள சிந்தனைகள் மற்றும் தொடர்புசாதனத் திறமைகளைப் பயன்படுத்துவதன் ஊடாக பிரச்சினைகளைத் தீர்க்க மாணவர்களை ஈடுபடுத்தலும் இதன் நோக்கமாகும்.

- Think Quest Live - சர்வதேச மாநாடு

வெற்றியாளர்களுக்கு சர்வதேச கல்வி வேலைத்திட்டங்களின் செயற்பாடுகள், சமூக வேலைத்திட்டங்களுக்க சந்தர்ப்பம் வழங்கும் ஐந்து நாள் வேலைத்திட்டங்களாக ஒரக்கல் கல்வி மன்றத்தினால் அமுல்படுத்தல்.

# அத்தியாயம் 4 :
# கல்விப் பிரவேசம் மற்றும் பங்கேற்பை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்

## 4.1 கட்டாயக் கல்விக் கோவைகளை அமுல்படுத்தல்

14 வயது வரையான சகல மாணவர்களுக்கும் பாடசாலைகளில் இணைந்து கொள்ள மற்றும் நிலைத்து நிற்பதற்காக பாடசாலை சமூகமளிப்புக் குழு பாடசாலையில் தாபிக்கப்பட்டது.

## 4.2 பாடசாலை சீருடை வழங்கல்

2011 ஆம் ஆண்டில் 1595 மில்லியன் ரூபா செலவில் அரச பாடசாலைகளில் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் மற்றும் பிரிவெனாக்களின் பிக்கு மாணவர்களுக்கு காவித் துணிகள் வழங்கப்பட்டன.

## 4.3 பாடசாலை பாடநூல் வழங்கல்

2011 ஆம் ஆண்டில் 1552 மில்லியன் ரூபா செலவில் சகல அரச பாடசாலைகள், பிரிவெனாக்களின் மாணவர்களுக்கு தேசிய கல்விக் கல்லூரியின் ஆசிரியர்களுக்கு பாடநூல்கள் வழங்கப்பட்டன.

## 4.4 புலமைப்பரிசில் வழங்கல்

5ம் தரத்தின் மாணவர்களுக்கு பரீட்சையில் உயரிய புள்ளிகளைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் 15,000 மாணவர்களில் ஒரு மாணவருக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது. க.பொ.த. (உ.த.) மாணவர்களுக்காக இக்கொடுப்பனவை 1,500 ரூபா வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.5 பாடசாலையின் மதிய உணவு வேலைத்திட்டங்கள் மற்றும் சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள்

கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுடன் இணைந்து சுகாதார வளமிக்க செயற்றிறன் மற்றும் பலம்பொருந்திய இளம் பரம்பரையினரை உருவாக்குவதற்கென பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- போசாக்கு மட்டத்தை மேம்படுத்தல்

  2011 ஆம் ஆண்டில் 6198 பாடசாலைகளில் 731,942 பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. சக்தியின்மையினை ஒழிப்பதற்காக மாணவர்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டன.

- சுகாதார வளமிக்க பாடசாலைச் சூழல் :

  தேவையான பாடசாலைகளுக்கு சுத்திகரிப்பு வசதிகள், நிர்தாங்கி மற்றும் நீர் வடிப்பான்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

  இலக்கம் 2007/21 சுகாதார ஊக்குவிப்பு சுற்றறிக்கைக்கு அமைய வெற்றிகரமான நிலையை எட்டியுள்ள 659 பாடசாலைகள் 21 வலயங்கள் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன. சுகாதார அறிவினை மேம்படுத்துவதற்காக மாணவர் முகாங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. சுகாதார வளமிக்க உணவுப் பயன்பாடு கொண்ட மாணவர்களின் நாடுகளுக்கு பாடசாலை உணக சுற்றறிக்கை (2011/03 கொண்ட) வழங்கப்பட்டது.

- பாடசாலை வைத்தியப் பரிசோதனை :

  2010 ஆம் ஆண்டில் பாடசாலை வைத்தியப் பரிசோதனைகள் பாடசாலைகள் மூலம் 83% பூர்த்திசெய்யப்பட்டன. சுகாதாரப் பிரச்சினைகள் கொண்ட மாணவர்களை இனங்கண்டு சிகிச்சைக்காக ஈடுபடுத்தப்பட்டனர்.

- எச்.ஐ.வீ. / எய்ட்ஸ் ஒளித்தல்

  மாணவர் முகாம்களை நடாத்துதல் மற்றும் மனோவியல் திறமைகளை விருத்தி செய்வதன் மூலம் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தி அதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு இடையே தவறான மற்றும் பாதகமான ஒழுங்கீனங்களைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



சர்வதேச கணித மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள்



கணினி ஆய்வுகூடங்கள் கிராமிய பிரதேச பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.



கணினித் தொழில்நுட்பத்தினை கற்பதனை ஊக்குவிப்பதற்காக மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வழங்குதல்

# அத்தியாயம் 5 :
# மனிதவள வளங்கள் மற்றும் அபிவிருத்தி

## 5.1 ஆசிரியர்கள்

### 5.1.1. ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு


2011 ஆம் ஆண்டில் அமைச்சு மற்றும் மாகாண சபை மூலம் ஆசிரியர்களாக பட்டதாரிகள் மற்றும் போதனாவியல் டிப்ளோமாதாரர்கள் 7358 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் 2180 பேர் தேசிய பாடசாலைக்காகவும், 5178 பேர் மாகாணப் பாடசாலைக்காகவும் நியமிக்கப்பட்டனர். 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளை கல்வித் துறைக்குச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1.1.: ஆசிரியர் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்**

| ஆண்டு | கல்வி அமைச்சினால் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளல் | | | | மாகாண சபையினால் பட்டதாரிகளைச் சேர்த்துக் | |
|---|---|---|---|---|---|---|
| | *தேசிய பாடசாலைக்காக* | | *மாகாணப் பாடசாலைக்காக* | | | |
| | *பட்டதாரிகள்* | *தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள்* | *பட்டதாரிகள்* | *தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள்* | *ஆசிரிய நியமனம்* | *ஏனைய நியமனங்கள்* |
| **2005** | 2923 | 383 | 326 | 2326 | 1925 | -- |
| **2006** | 2444 | 887 | 960 | 2451 | 2960 | -- |
| **2007** | -- | 408 | 1490 | 2191 | 967 | 321 |
| **2008** | -- | 427 | 671 | 2191 | 3070 | 1119 |
| **2009** | 971 | 1307 | -- | 1613 | 1498 | 46 |
| **2010** | 584 | 829 | 132 | 2078 | 2368 | 62 |
| **2011** | 1090 | 1090 | 2198 | 835 | 2145 | 235 |
| **Total** | **8012** | **5331** | **5777** | **13685** | **14933** | **1783** |

***மூலம் : கல்வி அமைச்சு***

**வரைபடம் 5.1.1.: அரச பாடசாலைகளில் ஆசிரியர்களின் அபிவிருத்தி 2005 - 2010**




***மூலம் : கல்வி அமைச்சு***

2010 பாடசாலை புள்ளிவிபரங்களுக்கு அமைய முறைமையின் 214,562 ஆசிரியர்கள் இருப்பதுடன் மொத்த மாணவ ஆசிரியர் விகிதாசாரம் 18 : 1 ஆகும். மொத்தமாக நோக்குமிடத்து இது மிகச் சிறந்த நிலைமை என்ற போதிலும் கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு அமைய ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அமைய நோக்கும் போது ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. ஆசிரியர்களைச் சமநிலைப்படுத்தத் தேவையான பல வியூகங்கள் ஏற்கனவே கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய நியமனங்களை வழங்குதல் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் சேர்த்துக் கொண்ட அளவுகளை அதிகரிப்பது இதில் பிரதான செயற்பாடாகும்.

**அட்டவணை 5.1.2: மாவட்டங்களுக்கமைய மொத்த மாணவர் ஆசிரியர் விகிதாசாரம்**

| மாவட்டம் | மாணவர் / பட்டதாரி விகிதாசாரம் | மாணவர் / பயிற்சி ஆசிரியர் விகிதாசாரம் | மாணவர் / பயிற்றப்படாத ஆசிரியர் விகிதாசாரம் | மொத்த / மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 49 | 45 | 1667 | 23 |
| கம்பஹா | 54 | 41 | 2547 | 23 |
| களுத்துறை | 52 | 37 | 812 | 21 |
| கண்டி | 47 | 28 | 460 | 17 |
| மாத்தளை | 44 | 27 | 400 | 16 |
| நுவரெலியா | 75 | 30 | 101 | 18 |
| காலி | 52 | 31 | 1714 | 19 |
| மாத்தறை | 40 | 27 | 1337 | 16 |
| அம்பாந்தோட்டை | 37 | 28 | 1881 | 16 |
| யாழ்ப்பாணம் | 42 | 35 | 273 | 18 |
| கிளிநொச்சி | 66 | 28 | 534 | 19 |
| மன்னார் | 67 | 32 | 208 | 19 |
| வவுனியா | 64 | 25 | 379 | 17 |
| முல்லைத்தீவு | 53 | 23 | 631 | 15 |
| மட்டக்களப்பு | 56 | 35 | 534 | 21 |
| அம்பாறை | 62 | 25 | 347 | 17 |
| திருகோணமலை | 92 | 28 | 456 | 21 |
| குருனாகல் | 41 | 36 | 544 | 16 |
| புத்தளம் | 74 | 27 | 211 | 22 |
| அனுராதபுரம் | 52 | 34 | 217 | 16 |
| பொலனறுவை | 56 | 25 | 272 | 19 |
| பதுளை | 46 | 31 | 169 | 15 |
| மொனராகலை | 44 | 31 | 138 | 16 |
| இரத்தினபுரி | 50 | 26 | 424 | 18 |
| கேகாலை | 44 | 26 | 389 | 16 |
| இலங்கை | **50** | **31** | **390** | **18** |

*மூலம் : கல்வி அமைச்சு*

## 5.1.2 தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கல்விக் கல்லூரிகளில் மேற்கொள்ளும் தாபன ஆசிரியர் பயிற்சிகள்

- 2012 ஆம் ஆண்டுக்காக தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு புதிதாக 3100 ஆசிரிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- கல்வி பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்கு 415 பட்டதாரி ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடல்.
- சிறுவர் நட்புறப் பாடசாலைப் பிரவேசங்கள் மற்றும் சிறுவர்களைக் கேந்திரமாகக் கொண்ட கற்கை தொடர்பான தேசிய கல்விக் கல்லூரிகளில் ஆசிரிய கல்வி பாடநெறிகளில் உள்ளடக்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் 31 ஆசிரிய பயிற்சி மத்திய நிலையங்கள் ஊடாக பயிற்றப்படாத பட்டதாரி அல்லாது 7300 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- அரச உதவி பெறும் தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் சேவையாற்றும் பயிற்றப்படாத 3500 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### 5.1.3 தொடர்ச்சியான ஆசிரியர் கல்வி

**கல்வித் துறைசார் அபிவிருத்தி வளங்களைப் பயன்படுத்தி ஆசிரியர்களுக்காக தொழில்சார் அபிவிருத்திப் பாடநெறியை 39 மத்திய நிலையங்களில் இரு நாட்களுக்குள் 95 செயலமர்வுகள் ஊடாக நடாத்தப்பட்டன**

## 5.2 கல்வி அபிவிருத்தி முகாமைத்துவத் தலைமைத்துவம்

**அட்டவணை 5.2.1.: இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களின் தேவை மற்றும் தற்போதுள்ள எண்ணிக்கை**

| 2011.12.31 ஆந் திகதியன்று | இ.க.நி.சே. 1 | இ.க.நி.சே. 11 | இ.க.நி.சே. 111 | மொத்தம் |
|---|---|---|---|---|
| தேவையானது | 200 | 300 | 1783 | 2283 |
| தற்போதுள்ள | 183 | 200 | 1285 | 1668 |

*மூலம் : கல்வி அமைச்சு*

- இ.க.நி.சே. 111 ஆம் வகுப்பின் விசேட பிரிவின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட 34 உத்தியோகத்தர்களுக்கு (2007 ஆம் ஆண்டில்) தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
- இ.க.நி.சே. 1 வகுப்பிற்கு பதவியுயர்த்தப்பட்ட (2010 இல்) 36 உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 5.3 உயர் தரத்திலான ஆசிரியர்களை உருவாக்குவதற்கான ஆசிரிய கல்வியியலாளர் சேவை

- இலங்கை ஆசிரிய கல்வி நிர்வாக சேவையின் மறுசீரமைக்கப்பட்ட பிரமாணக் குறிப்பு அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1ம் வகுப்பின் பதவியுயர்வுக்கு அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டது.



ஆரம்பக் கல்வியின் கற்றல் பொருட்களை தயாரிப்பதற்காக
பெற்றோர் பங்கேற்பு



சிறுவர் நட்புறவு ஆரம்பப் பாடசாலைகளின் விளையாட்டு மைதானம்



பாடசாலை விவசாயப் பண்ணை

## அத்தியாயம் 6 :
## பௌதீக வசதிகளை வழங்குதல்

### 6.1 கட்டிட நிர்மாணிப்பு

- போதியளவு அல்லாத நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டிருந்த 98 தேசிய பாடசாலைகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடிந்தமை.

- தேசிய பாடசாலை ஆசிரிய கல்லூரி மற்றும் தேசிய கல்விக் கல்லூரிகளில் இனங்காணப்பட்ட அத்தியவசிய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஹோமாகம, பிட்டிபன, மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் 36 வகுப்பறைக் கட்டிடத் தொகுதி மற்றும் ஆசிரிய ஓய்வறை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- நான்கு விரிவுரை மண்டபங்கள் மற்றும் 1200 மாணவர்களுக்கான வசதி கொண்ட பேராதனை தேசிய கல்விக் கல்லூரியின் உத்தேச கேட்போர் கூட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 6.2 கற்றல் உபகரணங்களை வழங்குதல

- இவ்வாண்டில் 1936 இலத்திரனியல் பியானோக்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. மேலும் 863 விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

- 30,000 விசேட கரும்பலகைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதில் 9750 விநியோகிக்கப்பட்டன.

- ஜேர்மன் உதவியில் பெறப்பட்ட கதிரைகள் மற்றும் மேசைகள் தேசிய கல்விக் கல்லூரி மற்றும் சிறுவர் செயற்பாட்டு மத்திய நிலையத்திற்கு விநியோகிக்கப்பட்டன.



விளையாட்டுத்
திறமையினை
மேம்படுத்துவதற்காக
விளையாட்டு
முகாம்களை
நடாத்துதல்



ஆசிரியர்களின்
தகவல்
தொழில்நுட்பத்
திறமைகளை
விருத்தி செய்தல்



கல்வி பண்புசார்
அபிவிருத்திக்கான
ஆசிரியர்
அபிவிருத்தி

# அத்தியாயம் 7 :
# கல்வித் துறைசார் அபிவிருத்திப் பிரவேசம் மற்றும் கல்வியின் நோக்கத்தினை எட்டுதல்

## 7.1 2012 - 2016 நடுத்தரக் கால திட்டங்களை வகுத்தல்

கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டமான நடுத்தரக் காலத் திட்டங்கள் (2012 - 2016) உரிய சகல நிறுவனங்களினதும் பங்கேற்புடன் வகுக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. இவ் நடுத்தரக் காலத்திட்டங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட மூன்று தொனிப்பொருட்களின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

தொனிப்பொருள் 1 : ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான சம நியாயப் பிரவேசத்திற்கான சந்தர்ப்பத்தினை அதிகரித்தல்

தொனிப்பொருள் 2 : ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் பண்புசார் தரத்தை மேம்படுத்தல்

தொனிப்பொருள் 3 : சிறந்த நிர்வாக மற்றும் கல்விச் சேவையினைப் பலப்படுத்தல்.

தொனிப்பொருள் : கல்வித் துறைசார் அபிவிருத்தியின் திருப்புமுனைத் திட்டங்கள் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

கல்வித் துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் மஹிந்த சிந்தனையின் தேசிய கொள்கைக்கு அமைய வகுக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச ரீதியிலான மிலேனிய அபிவிருத்தி நோக்கு, சகலருக்கும் கல்வியின் நோக்கு, வலய ரீதியில் சார்க் அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. கீழே குறிப்பிடப்பட்டிருப்பது கல்வியின் பிரவேச, பண்புசார், பயன்பாடு மற்றும் வினைத்திறனை அளவீடு செய்யும் சுட்டிகளாகும்.

## 7.2 ஆரம்பக் கல்விக்கான பிரவேசம

**அட்டவணை 7.2.1.: 5 - 11 வயது மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம்**

| | பாடசாலைக்குள்ள தூரம் | | | | |
|---|---|---|---|---|---|
| **தூரம்** | 1 கி.மீ. ஐ விடக் குறைந்த | 1 - 3 கி.மீ. | 3 - 5 கி.மீ. | 5 - 10 கி.மீ. | 10 கி.மீ. இற்கு மேற்பட்ட |
| **மாணவர் விகிதாசாரம்** | 40.6 | 34.1 | 10.9 | 8.2 | 6.1 |

*Source: Child Activity Survey, 2008/09*

இவ்வட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டிருப்பது ஆரம்ப வயதெல்லைச் சிறார்களின் 74.7% வீட்டில் இருந்து 3 கி.மீ. இற்குட்பட்ட தூரத்தில் பாடசாலை அமைந்திருப்பதாகும். 85.6% மாணவர்களுக்கு வீட்டில் இருந்து 5 கி.மீ. இற்குள் அமைந்துள்ள பாடசாலை செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.


## 7.3 கல்வியின் மாணவர் பங்கேற்பு

**அட்டவணை 7.3.1.: ஆரம்பக் கல்விக்காக தேறிய மற்றும் மொத்த ஆவணங்கள் விகிதாசாரத்திற்கமைய**

| | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| **தேறிய ஆவண்ங்களின் விகிதாசாரம்** | 101 | 102 | 102 |
| **மொத்த ஆவண்ங்களின் விகிதாசாரம்** | 99 | 99 | 99 |

*Source: Household Income and Expenditure Survey 2006/07*

வரைபடம் 7.3.1.: ஆரம்பக் கல்வியின் மொத்த ஆவணப்படுத்தப்பட்ட விகிதாசாரம் 1996 - 2006




## 7.4 ஆரம்பக் கல்விச் சுற்றினைப் பூரணப்படுத்தல்

அட்டவணை 7.4.1.: மாணவர் நிலைத்து நிற்கும் விகிதாசாரம் - 2008

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 5ம் தரம் வரை நிலைத்து நிற்கும் விகிதாசாரம் | 99 | 100 | 99 |
| 9ம் தரம் வரை நிலைத்து நிற்கும் விகிதாசாரம் | 89 | 93 | 91 |

***Source: Annual School Census 2008(Transforming School Education in Sri Lanka, 2011)***

2011 ஆம் ஆண்டில் மொத்த தேறிய அடிப்படையில் ஆண் பிள்கைளில் 99% மானோர், பெண்களில் 100% மானோர் ஆரம்பக் கல்வியினைப் பூர்த்தி செய்துள்ளனர். இது எவ்வாறக இருப்பினும் 9ம் தரத்திற்குச் செல்வதற்கும் முன்னர் சுமார் 9% மாணவர்கள் பாடசாலையில் இருந்து விலகியிருப்பதைக் காண முடிகிறது.

## 7.5 *ஆசிரியர்களின் நிலைமைகள்*

பாடசாலை முறைமையில் உள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மானிட வளமாக அமைவது பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்களாகும். எமது ஆசிரியர்களில் கூடுதலானோர் கல்விக் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற அல்லது பட்டதாரி ஆசிரியர்களாகும். இது எவ்வாறக இருப்பினும் எதிர்கால உலகுக்குப் பொருத்தமானவாறு கல்வியை வழங்குவதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக ஆசிரியர்களின் அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக ஆசிரிய கல்வி விருத்தி செய்யப்பட வேண்டுமென கல்வி அமைச்சு இனங்கண்டுள்ளது. கடந்த தசாப்தத்திற்குள் பாடசாலைப் பாடவிதானங்கள் மாற்றம் பெற்றுள்ளதுடன் சகல பாடங்களினதும் தகவல் தொகுதிகள் அதற்கமைய அதிகரித்துள்ளன. இதற்காக கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து ஆசிரிய கல்வி மற்றும் ஆசிரிய கல்விப் பாடவிதானத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

அட்டவணை 7.5.1.: ஆசியர் பெற்றுக்கொண்ட உயர் கல்வித் தகைமைக்கமைய விகிதாசாரம்

| மாவட்டம் | க.பொ.த. (சா.த.) | க.பொ.த. (உ.த.) | கலைமானி / விஞ்ஞான மானி / கல்வி மானி பட்டம் | கலைமானி / விஞ்ஞான மானி / கல்வி மானி / தத்துவமானி பட்டம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 7.7 | 39.9 | 49.7 | 2.6 |
| கம்பஹா | 8.4 | 44.5 | 44.8 | 2.3 |
| களுத்துறை | 8.4 | 46.1 | 43.6 | 1.9 |
| கண்டி | 6.6 | 52.2 | 39.0 | 2.2 |
| மாத்தளை | 7.7 | 52.0 | 38.7 | 1.6 |
| நுவரெலியா | 7.7 | 64.3 | 27.0 | 1.0 |
| காலி | 6.9 | 51.1 | 40.7 | 1.3 |
| மாத்தறை | 10.3 | 45.8 | 43.2 | 0.8 |
| அம்பாந்தோட்டை | 4.9 | 49.0 | 45.4 | 0.7 |
| யாழ்ப்பாணம் | 2.7 | 50.8 | 43.0 | 3.5 |
| கிளிநொச்சி | 1.9 | 65.3 | 32.1 | 0.7 |
| மன்னார் | 0.9 | 66.7 | 30.3 | 2.1 |
| வவுனியா | 3.5 | 64.8 | 30.4 | 1.3 |
| முல்லைத்தீவு | 1.9 | 65.8 | 31.2 | 1.0 |
| மட்டக்களப்பு | 5.3 | 51.7 | 41.8 | 1.2 |
| அம்பாறை | 5.9 | 61.9 | 31.5 | 0.7 |
| திருகோணமலை | 6.3 | 66.8 | 25.4 | 1.4 |
| குருனாகல் | 6.1 | 50.0 | 42.3 | 1.6 |
| புத்தளம் | 4.9 | 59.8 | 34.0 | 1.2 |
| அனுராதபுரம் | 9.0 | 54.9 | 35.2 | 0.9 |
| பொலனறுவை | 6.3 | 54.2 | 38.5 | 1.0 |
| பதுளை | 9.6 | 54.1 | 35.4 | 1.0 |
| மொனராகலை | 5.2 | 53.9 | 40.2 | 0.8 |
| இரத்தினபுரி | 6.0 | 53.1 | 39.6 | 1.3 |
| கேகாலை | 8.3 | 51.2 | 39.0 | 1.6 |
| இலங்கை | 6.9 | 51.9 | 39.6 | 1.5 |

## 7.6 கற்றல் பயன்களின் நிலைமை

மாணவர் கற்கைப் பயன்கள் கல்வியின் உயர் தரத்தினை மதிப்பீடு செய்யும் பிரதான சுட்டியாகக் காணப்படுவதுடன் அதனை நிறுவன அபிவிருத்திக்காக வழிகாட்டும் உபாயமாகப் பயன்படுத்த முடியும். 7.6.1. மற்றும் 7.6.2. அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள சமீபகால ஆண்டுகளில் ஆரம்பக் கல்வியின் கற்றல் முறைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. 7.6.3. அட்டவணைக்கமைய கனிஷ்ட, இடைநிலைத் தரங்களின் கற்றலின் பயன்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. 7.6.3 அட்டவணைக்கமைய கனிஷ்ட இடைநிலைத் தரங்களில் விருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மாணவர் அடைவுமட்டம் மேம்படுத்தப்பட்டுள்ள போதிலும், கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அடைவு மட்டங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். தற்போது க.பொ.த. (உ.த.) பாடங்களின் கூடுதலான விகிதாசாரம் கற்பதும் மற்றும் உயர்தரக் கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவதும் கலைப் பாடவிதானமாகும். இந்நிலைமையை மாற்றியமைத்து கூடுதலான மாணவர்களை விஞ்ஞானம் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் ஈடுபடுத்துவது அத்தியவசியமாகும்.

மஹிந்த சிந்தனை அபிவிருத்திப் பிரவேசம் ஊடாக இலங்கையை ஆசியாவின் அறிவின் கேந்திரமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் பாடசாலைக் கல்வியின் புதிய வாயில்களைத் திறக்க வேண்டிய தேவை புள்ளிவிபரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய கல்வி, உயர்கல்வி, இளைஞர் விவகார மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி தொழிநுட்பம், ஆராய்ச்சி மற்றும் விளையாட்டு அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் ஊடாக உயர் கல்விக்கு மற்றும் விரிவான தொழில் கல்விக்கு மாணவர்களைஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 7.6.1.: 5ம் தரத்தின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா.த.) பரீட்சை மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் மாணவர் அடைவு மட்டம்**

| வருடம் | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்றோர் விகிதாசாரம் | க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றி க.பொ.த. (உ.த.) இற்கு தகைமை பெற்றோர் விகிதாசாரம் | க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றோர் விகிதாசாரம் |
|---|---|---|---|
| **2007** | 58.83 | 51.47 | 61.41 |
| **2008** | 39.45 | 56.80 | 62.89 |
| **2009** | 57.63 | 52.51 | 61.21 |
| **2010** | 56.19 | 60.57 | 61.67 |
| **2011** | 64.90 | 60.80 | - |

மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**அட்டவணை 7.6.2.: ஆரம்பப் பிரிவின் நான்காம் தரத்தில் மாணவர்கள் கற்பது தொடர்பான தேசிய மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள அடைவு மட்டங்கள் 2003 - 2009**

| | 2003 | | 2009 | |
|---|---|---|---|---|
| | *0 - 50 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *51 - 100 இற்கிடைப் பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *0 - 50 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *51 - 100 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* |
| **கணிதம்** | 35 | 65 | 21 | 79 |
| **ஆங்கிலம்** | 69 | 31 | 44 | 56 |
| **முதல் மொழி** | 33 | 67 | 20 | 80 |


*Source: National Assessment of Learning Outcomes at Grade 4, NEREC*

அட்டவணை 7.6.3.: கனிஷ்ட இடைநிலைப் பிரிவின் 8ம் தரத்தின் மாணவர்களின் கற்றல் தொடர்பாக தேசிய மதிப்பீடுகள் காண்பிக்கப்பட்ட அடைவுமட்டங்கள் 2005 - 2009

| | 2005 | | 2008 | |
|---|---|---|---|---|
| | *0 - 50 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *51 - 100 இற்கிடைப் பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *0 - 50 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* | *51 - 100 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் விகிதாசாரம்* |
| கணிதம் | 67 | 33 | 55 | 45 |

*Source: National Assessment of Learning Outcomes at Grade 4, NEREC*

வரைபடம் 7.6.1.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கட்டாயப் பாடங்களில் மாணவர் அடைவுமட்டம் 2008 - 2011




மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அட்டவணை 7.6.4.: க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மாணவர் அடைவு மட்டப் பாடங்கள் மற்றும் மொழிக்கமைய.

| பாடவிதானம் | சிங்கள மொழி | | தமிழ் மொழி | | ஆங்கில மொழி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *தோற்றியோர்* | *பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்றோர்* | *தோற்றியோர்* | *பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்றோர்* | *தோற்றியோர்* | *பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்றோர்* | *தோற்றியோர்* | *பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்றோர்* |
| உயிரியல் | 15,647 | 37.10 | 2,599 | 46.40 | 570 | 52.30 | 18,816 | 38.84 |
| பௌதீகவியல் | 12,421 | 34.90 | 1,945 | 41.40 | 572 | 49.50 | 14,938 | 36.28 |
| வர்த்தகம் | 32,315 | 58.10 | 5,493 | 59.10 | 707 | 72.30 | 38,515 | 58.49 |
| கலை | 52,922 | 63.10 | 16,170 | 68.60 | 149 | 67.80 | 69,241 | 64.37 |
| மொத்தம் | 113,305 | 55.00 | 26,207 | 62.40 | 1,998 | 59.70 | 141,510 | 56.41 |

மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்




தகவல் தொழில்நுட்ப ஆசிரிய—மாணவர் திறமைகளை மதிப்பீடு செய்வதற்கான வேலைத் திட்டங்களில் வெற்றியீட்டியோருக்கு விருது வழங்கல்




வடக்கின் ஆசிரியர்களது திறமைகளைக் கௌரவித்தல்



பாடசாலை வைத்தியப் பரிசோதனையின் ஊடாக சிறார்களின் சுகாதாரப் பிரச்சினைகளை இனங்காண நடவடிக்கை எடுத்தல்

# அத்தியாயம் 8 :
# கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

## 8.1 ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வியின் பண்புசார் தரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் "சிறுவர் நட்புறவுப் பாடசாலை" பிரவேசத்தினை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்ய யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. சகல மாணவர்களினதும் ஆரம்பக் கல்விப் பருவத்தில் அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை எட்டுவதை உறுதிசெய்யும் வகையும் சிறுவர் நட்புறவுப் பாடசாலைப் பிரவேச அபிவிருத்தியைக் கொண்டு சிறுவர் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- 2011 ஆம் ஆண்டில் 206 தேசிய பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுக்காக பண்புசார் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- 251 தேசிய பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- சகல மாகாணங்களிலும் கணித அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆங்கில மாணவர் முகாம்கள் நடாத்தப்பட்டன.
- 5 தேசிய பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுக்காக தளபாடங்கள் மற்றும் கணினிகள் வழங்கப்பட்டன.
- மாணவர் அடைவு மட்டத்தை விருத்தி செய்யும் நோக்குடன் 5ம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் பகுப்பாய்வுகள் தொடர்பாக மாகாண வளவாளர் குழுக்கள் அறிவுறுத்தப்பட்டன.
- 14 பாடசாலைகளில் முதலாம் தரத்துக்காக மேற்பார்வை மட்டத்தில் பல்லூடக கற்கை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 303 அதிபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்களுக்காக கணினிப் பயிற்சி, ஆங்கில மொழி மற்றும் சிந்தனை விருத்தி வேலைத்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

## 8.2 சமய மற்றும் விழுமியக் கல்வி

சமயத்தைக் கற்பித்தலுக்கு அமைய தமது வாழ்வினைக் கட்டியெழுப்புவதன் மூலம் விழுமியத்தைப் பாதுகாத்து சிறந்த பிரஜைகளை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு கல்வி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- 2011 ஆம் ஆண்டில் விசேடமாக 2600 வது சம்புத்த ஜயந்தியைக் கொண்டாடுவதற்காக பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
  - பௌத்த சிறார்கள் கூடுதலாகக் கற்கும் பாடசாலைகளில் சில் அனுஷ்டான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
  - 2600 வது சம்புத்த ஜயந்தி கலைக் கோவையை வெளியிடல்.
  - நாட்டின் பிரதேசங்களிலும் வருகை தரும் பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவிகளின் பங்கேற்புடன் "எசல மகா பெரஹர"2011 ஜூலை 14ம் திகதி கொழுமட்பில் நடாத்தப்பட்டது.
- 2011 தேசத்துக்கு மகுடக் கண்காட்சிக்கு இணைவாக புத்தல, மொனராகலை, வெல்லவாய மற்றும் பிபில ஆகிய வலயங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக விழுமியத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- கொழும்பு ஆனந்தா மகளிர் கல்லூரி வளாகத்தில் அனகாரிய தர்மபாலவின் உருவச் சிலை திறக்கப்பட்டதுடன், அவருக்காக நூதன சாலையும் திறக்கப்பட்டது.
- பிரதமர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் "சிரித் மல்தெம" கவிதை கொண்ட இறுவெட்டுக்கள் பாடசாலைகளுக்கு இடையே விநியோகிக்கப்பட்டன.
- பௌத்த சமயப் பாடத்தின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக மத்திய, ஊவா, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பல வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே விழுமியத்தைக் கட்டியெழுப்புவதற்கான பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 8.3 பிரிவெனாக் கல்வி

இலங்கையின் பாடசாலைகளுக்காக வழங்கப்படும் சகல வசதிகளையும் பிரிவெனாக்களுக்கு வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய கணினிக் கல்வி, ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிக் கல்விக்குத் தேவையான சகல வசதிகளும் பிரிவெனாக்களுக்கு வழங்கப்படும்.

- சமகாலத் தேவைக்கு அமைய 1979 இலக்கம் 64 கொண்ட பிரிவெனாக் கல்விச் சட்டத்தை மறுசீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- தேவைக்கமைய இனங்காணப்பட்ட 12 பிரிவெனாக்களை அவ்வப் பிரதேசங்களில் தாபிக்கத் தேவையான அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.
- 45 பிரிவெனாக்களில் மும்மொழிக் கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
- நேபாளம் மற்றும் இந்தியாவில் தாபிக்கப்பட்டுள்ள பிரிவெனாக்களுக்காக தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- பிரிவெனாக்களின் நூலகங்களுக்காக முப்பீட நூல்கள் விநியோகிக்கப்பட்டன.
- பிரிவெனாக்களுக்கிடையே மொழி மற்றும் இலக்கியப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

## 8.4 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழிநுட்பக் கல்வி

கல்வியின் நோக்கங்களை எட்டுவதற்காக தற்போது தகவல் தொழிநுட்பம் முக்கிய கருவியாக பயன்படுத்தப்படுகிறது. தற்போதைய பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்தில் ஏதேனும் இத்துறையில் தொழில்சார் தரத்தை மேம்படுத்துவதற்காக தகவல் தொழிநுட்பம் பெரும் பயன்மிக்கதாக அமைந்துள்ளன.

- 2011 ஆம் ஆண்டில் 127 பாடசாலைகள் கணினி ஆய்வுகூடங்களுக்காக கணினிகளை வழங்க நடவடிக்கைள் எடுக்கப்பட்டன.
- கதிர்காமம் மத்திய கல்லூரியில் கணினி ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கதிர்காமம் மற்றும் நக்காவத்தை மத்திய கணினி ஆய்வுகூடத்திற்காக கணினி இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
- வவுனியா தகவல் தொழிநுட்ப மத்திய நிலையத்தின் வதிவிட நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டன.
- க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) தகவல் தொழிநுட்பப் பாடத்தை விருத்தி செய்வதற்காக மாணவாத் கருத்தரங்கு மற்றும் ஆசிரிய கொள்ளளவு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- "சகல மாணவர்களுக்கும் லப்டொப் கணினி" செயற்றிட்டத்திற்கு இணைவாக 1 - 5 தரத்துக்காக பாட இணை மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டன.
- வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழுவின் மூலம் பாடசாலைகளில் கணினி ஆய்வுகூடங்கள் சார்ந்த வன்பொருள் வலையமைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- தகவல் தொழிநுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக தேசிய போட்டிகள் நடாத்தப்பட்டன.

***தேசிய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழிநுட்பப் போட்டித் தொடர்***

இலங்கையின் தகவல் தொழிநுட்பக் கைத்தொழிலாளர்களின் ஒன்றியம் மற்றும் இலங்கை கணினிச் சங்கத்துடன் இணைந்து கல்வி அமைச்சினால் இப்போட்டித் தொடர் நடாத்தப்பட்டது.

வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விருதுகள் கௌரவ கல்வி அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தின் போது வழங்கப்பட்டன. சகல மாகாணங்களையும் பிரதிநித்துவப்படுத்தி 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அவர்களது தகவல் தொழிநுட்ப ஆக்கங்களை மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் காட்சிப்படுத்தினர். தேசிய மட்டத்தில் 6 வெற்றியாயளர்கள், மாகாண மட்டத்தில் 27 வெற்றியாளர்கள் மற்றும் 100 பேர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்கள் மற்றும் விருதுகளும் வழங்கப்பட்டன.

**அட்டவணை 8.1.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தகவல் தொழிநுட்பப் பாடத்தின் அடைவு மட்டம் 2008 - 2011**

| | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| பாடத்துக்காக தோற்றிய எண்ணிக்கை | 38759 | 40413 | 41490 | 39797 |
| சித்தியடைந்த எண்ணிக்கை | 87.54 | 82.13 | 82.33 | 71.39 |


*மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்*

## 8.5 கணிதக் கல்வி

சவால்களை எதிர்கொள்ளக் கூடியவாறு ஆக்கத்திறன் மிக்க தர்க்க ரீதியில் சிந்திக்கக் கூடிய மாணவர் பரம்பரையை உருவாக்கும் நோக்குடன் கணிதக் கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன.

- 5ம் தரத்திலிருந்து 6 ஆம் தரத்துக்கு வரும் மாணவர்களுக்கிடையே கணித அறிவின் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்காக 6ம் தரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 மாணவர்களுக்கு மீளூட்டல் கல்வி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்காகத் தேவையான 28,000 ஒப்படைப் புத்தகங்கள் அச்சிட்டு மாகாணங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
- க.பொ.த. (சா.த.) பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக 11 ஆம் தரத்தின் 20,000 மாணவர்களுக்கு மீளூட்டல் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன."கணிதத்திற்கு உதவிக் கரம்" புத்தகத்தின் 1000 பிரதிகளை அச்சிடும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து மத்திய நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
- கேத்திர கணிதத் திறமையினை மேம்படுத்துவதற்காக கணித ஆசிரியர்கள் மற்றும் 1050 வளவாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- ஜயவர்தனபுர, பிலியந்தல மற்றும் ஹொரண கல்வி வலயங்களின் கணிதப் பாடத்தை மேம்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

**வரைபடம் 8.1.: க.பொ.த. (சா.த.) கணிதப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்**





*மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம*

## 8.6 விஞ்ஞானக் கல்வி

விஞ்ஞான அறிவு கொண்ட பரம்பரையை உருவாக்குவதற்காக பண்புசார் தரமிக்கதாக பாடசாலைகள் மூலம் விஞ்ஞானக் கல்வியினை வழங்குவது அத்தியவசியமாகும். நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக புதிய அறிவினைப் பயன்படுத்தும் விஞ்ஞான ரீதியிலான எழுத்தறிவு கொண்ட ஊழியர் அணியினை உருவாக்குவது கல்வி அமைச்சின் நோக்கமாகும்.

- க.பொ.த. (சா.த.) பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் பாடங்களை பாடவிதானத்துக்கு உட்படாத பகுதிகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதற்காக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சீர்திருத்தப்பட்ட பாடவிதானம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.
- விஞ்ஞான உபகரணம் மற்றும் இரசாயனவியல் உபகரணங்கள் 400 பாடசாலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன் இப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது குறிப்பிடத் தக்க ஒப்பளவுகள் தொடர்பான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டன.
- துறைசார் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் துறைசார் கல்வி மத்திய நிலையங்களை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்பக் கல்வி அமைச்சுடன் இணைந்து கஷ்டப் பிரதேசங்களின் மாணவர்களுக்கு கொழும்பின் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதற்காக சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.
- நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூடப் பயன்பாடு தொடர்பான அறிக்கையைத் தயாரித்து எதிர்கால நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூடத்தை வழங்குவதற்கான முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பாடசாலைகளில் மின்சக்திப் பாதுகாப்புக் கழகங்கள் தாபிக்கப்பட்டன.
- ஆசிரியர்களுக்காக நனோ தொழிநுட்பம் தொடர்பான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

**வரைபடம் 8.2.: க.பொ.த. (சா.த.) விஞ்ஞானப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்**




*மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்*

## 8.7 தேசிய மொழி மற்றும் மானிட சாஸ்திரக் கல்வி

இலங்கையின் அடையாளத்தைக் காக்கும் கலாச்சாரம் மற்றும் தேசிய மொழியைக் கௌரவிக்கும் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் நோக்கத்தை உண்மையாகவே எட்ட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு கலாச்சாரத்தைப் பொறுப்பளிக்க உதவக் கூடிய மொழித் திறமை மற்றும் சமூக அறிவினை மேம்படுத்துவதற்கான பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.


- 6 - 13 ஆம் தரங்களில் மாணவர்களின் மொழித் திறமையை மேம்படுத்தும் நோக்குடன் சிங்களம், தமிழ் மற்றும் இரண்டாம் மொழி ஆகிய மூன்று மொழிகளிலும் மொழி மற்றும் இலக்கியப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.
- சிறுவர் எழுத்தாளர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக "நுவன" மற்றும் "கூர்மதி" சஞ்சிகைகள் அச்சிட்டு விநியோகிக்க நடவடிகக்கைகள் எடுக்கப்பட்டன.

## 8.8 ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிக் கல்வி

கல்வி அமைச்சின் நோக்காக அமைவது ஆங்கில மொழியை சிறந்த முறையில் வாசிக்க, தெளிவாக எழுதக் கூடிய, பேசக் கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதாகும். மாணவர்களுக்கு ஆங்கில மொழிசார்ந்த கணிசமான கற்கைப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடியவாறு மொழித் திறன் மிக்க சந்ததியினரை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் உலகின் பிரபலமான மொழி-களைக் கற்பதிலும் மாணவர்களை ஈடுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஆங்கில மொழியைப் பழக்குவதற்காக 2011 ஆம் ஆண்டில் 1152 மாணவர்களின் பங்கேற்புடன் போட்டிகள், கண்காட்சி முகாம்கள் மற்றும் விழாக்கள் நடாத்தப்பட்டன.
- வலய ரீதியிலான ஆங்கிலக் கல்வி மத்திய நிலையங்களில் 800 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான பாடநெறிகள் நடாத்தப்பட்டன.
- சுமார் 100,000 மாணவர்களுக்கு பயன்படுத்தக் கூடியதாக ஆங்கில வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- ஆங்கிலக் கல்விக்காக விசேட மூன்று மத்திய நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

**வரைபடம் 8.3.: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் சித்தியடைந்த விகிதாசாரம் - 2011**




*மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்*

***வாழ்க்கைத் தேர்ச்சிக்காக ஆங்கிலம்***

பிள்ளைகளுக்கு அச்சமின்றி, கூச்சமின்றி ஆங்கில மொழியில் பேசுவதற்கு ஊக்குவிக்கும் வகையில் ஜனாதிபதி செயலகத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டமாகும். பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். மாகாண மட்டதில் அமல்படுத்தப்பட்ட பல வேலைத்திட்டங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் பிரதானமாகும்.

- 10 நாள் ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டம்.
- மாகாண வேலைத்திட்டப் பிரிவினைத் தாபித்தல்.
- இறுவெட்டுக்களை வெளியிடல்.
- பயன்பாட்டுச் செயற்பாடுகள் கொண்ட கற்றல் உபகரணங்களை உருவாக்குதல்.
- அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களுக்காக 100 மணித்தியால ஆங்கிலச் சான்றிதழ் பாடநெறியை அமுல்படுத்தல்.
- கல்விக் கோட்டங்களில் ஆங்கில செயற்பாட்டு அறைகளை அமுல்படுத்தல்.
- பரீட்சை மதிப்பீட்டு ஆலோசனைக் கோவைகளை மீள அச்சிடல்

## 8.9 இரட்டை மொழிக் கல்வி

மொழியின் பல்வகைத் தன்மைகள் ஊடாக அறிவினை முழு உலகெங்கிலும் விருத்தி செய்ய மற்றும் இந் நோக்கினை அடிப்படையாகக் கொண்ட எதிர்காலச் சந்ததியினரை உருவாக்குதல் பல்மொழி திறமைகளை விருத்தி செய்வதனைப் பலப்படுத்துவதற்காக இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- இதன் கீழ் இடைநிலைத் தரங்களின் மாணவர்களுக்கு பல பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பதற்பகான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இரட்டை மொழிக் கல்விக்கான சந்தர்ப்பம் கொண்ட பாடசாலை எண்ணிக்கையை ஆயிரம் பாடசாலை வரை விருத்தி செய்யப்பட்டன.
- 57 ஆசிரிய மத்திய நிலையங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி மூலம் கற்பிப்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 57 ஆசிரிய மத்திய நிலையங்களின் முகாமையாளர்கள், இரட்டை மொழி ஆசிரியர்கள் 64 பேர்கள் மற்றும் 50 அதிபர்கள் இவ்வேலைத்திட்டங்கள் தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டனர்.
- ஆங்கில மொழி மூல புதிய 130 பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- இரட்டை மொழி மாணவர்களுக்கு மதிப்பீட்டுச் செயற்பாடுகளின் அழுத்தங்கள் காணப்படுகின்றதா என்பது குறித்து பகுப்பாய்வு செய்ய நடவடிக்ககள் எடுக்கப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டில் அமல்படுத்தவுள்ள உள்ளீடு மற்றும் மொழிக் கற்கைக் பேகாட்பாடுகளை வகுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 8.10 விவசாய மற்றும் ஊழல் கல்வி

மாணவர்களின் விவசாய அறிவினைப் போன்று விவசாயக் கைத்தொழில் மற்றும் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்குத் தேவையான தேர்ச்சி மற்றும் சிந்தனைகளை விருத்தி செய்வதனை கேந்திரமாகக் கொண்ட பாட இணைச் செயற்பாடுகளில் பங்குகொள்ள இவ்வேலைத்திட்டத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 32 விவசாயப் பண்ணைகளை தாபிப்பதற்காக 110 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- காணப்படும் 10 விவசாயப் பண்ணைகளின் பராமரிப்புக்காக பாடசாலைகளுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன.
- பசுமையான பாடசாலை வேலைத்திட்டம் தொடர்பாக மாகாண மற்றும் வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் 20 பேர்களுக்கும், மேல் மாகாணத்தின் 25 உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படடன.
- பசுமையான பாடசாலை வேலைத்திட்டம் தொடர்பாக ஆலோசனைக் கோவைகள் தயாரிக்கப்பட்டன.
- 100 பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் சூழல் முகாம்கள் மேல் மாகாணத்தில் நடாத்தப்பட்டன.
- குளோப் வேலைத்திட்டத்தின் கீழ் நீர் மற்றும் தழுவல் கற்கை முகாம்கள் 600 மாணவர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டன.
- பங்கசு மற்றும் நிலத்தினைத் தழுவக் கூடியவாறான கல்வி முகாம்கள் ஆசிரியர்கள் மற்றும் 60 உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டன.
- கடற்றொழில் மற்றும் உணவு தொழிநுட்பம், நில அரங்காரம் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழிநுட்பம் தொடர்பாக விவசாய உத்தியோகத்தர்கள் 52 பேருக்கு இவ்வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 100 தேசிய பாடசாலைகளுக்காக விவசாய உபகரணங்கள், 5 பாடசாலைகளுக்காக குளோப் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

*“நாம் இன்று பயிரிடுவோம், நாளை பயன் பெறுவோம்” வேலைத்திட்டத்தின் கீழ் சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு விழாவுக்கு இணைவாக ஐம்பது இலட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம், விவசாய தெங்கு அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்களுக்குரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களுடன் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டன.*

## 8.11 அழகியற் கல்வி

மனித நேயம் கொண்ட எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் நோக்குடன் அழகியல் கல்வி வேலைத்திட்டங்களாக மொழி இணைச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- "சனி தின" பல்கலை - சித்திரம், நடனம், சங்கீதம் மற்றும் நாடகப் பாடநெறிகளுக்காக 12,770 பேர் 2011 ஆம் ஆண்டில் கலந்து கொண்டனர்.
- நடனம், மேற்கத்தேய சங்கீதம், கீழைத்தேய சங்கீதம், நாடகம் மற்றும் நடனக் கலைக்காக அகில இலங்கை பாடசாலை அழகியல் போட்டித் தொடர் 60,000 மாணவர்களின் பங்கேற்புடனும் சித்திரப் போட்டி சகல மாணவர்களின் பங்கேற்புடனும் நடாத்தப்பட்டன.
- "சொந்துரு புபுதுவ" வேலைத்திட்டத்திற்காக 400 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர்.
- 380 பாடசாலை மாணளவர்களுக்கு மாறுவேடத்திற்காக சம்பிரதாய உற்சவம் நடாத்தப்பட்டது.
- 340 பவாடசாலை மாணவர்களுக்காக அழகியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- வடக்கின் நண்பர்கள் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் சிங்களம் மற்றும் தமிழ் மாணவர்களின் அழக-ியல் திறமைகளை உறுதிப்படுத்தச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

## 8.12 வர்த்தகம் மற்றும் வர்த்தக் கற்கை

வர்த்தகம் மற்றும் வர்த்தகக் கற்றைப் பாடங்கள் ஊடாக எதிர்கால முன்னேற்றம் அடைந்து வரும் உலகிற்குத் தேவையான திறமை மிக்க பிரஜைகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

- வர்த்தக கல்வி இணைப்பு உத்தியோகத்தர்கள் 110 பேர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் 125 பேர்களுக்கு புதிய வேலைத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மாற்றியமைக்க வேண்டிய பிரிவுகளை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படடன.
- செயலமர்வுகள் ஊடாக தற்போதுள்ள வர்த்தகப் பாடப் பரிந்துரையின் பொருத்தமற்ற விடயங்களை இனங்காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 8.13 விளையாட்டு மற்றும் உடற்கல்வி

ஊக்குவிப்புக்கள், உடற் பயிற்சிகள் மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்கும், பழக்குவதற்கும் செயற்பாட்டு ரீதிய-ிலான வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்புவது விளையாட்டு மற்றும் உடற்கல்வி வேலைத்திடடத்தின் நோக்கமாகும்.

- கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டித் தொடர்ப 2011 ஆகஸ்ட், ஒக்டோபர் ஆகிய கால எல்லைக்குள் 3 கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டன.
- இதன் போது விசேடமாக குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமாக அமைவது இலங்கை வங்கியின் அனுசரணையுடன் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்க நிதியுதவிகள் வழஙகப்பட்டமையாகும். இதற்கமைய சகல நிகழ்ச்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்க 25,000 ரூபா வீதம் 40 விளையாட்டு வீரர்களுக்கு இடையே பரிசில்கள் வழங்கப்பட்டன.
- முழுமையாகப் போட்டித் தொடரில் திறமைகழளக் காண்பித்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 125,000 ரூபா வீதம் தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணையில் வழங்கப்பட்டன.

*2011 தேசிய பாடசாலை விளையாட்டு விழாவில் புதிய 20 சாதனைகளைப் படைத்த விளையாட்டு விர்ர்கள்*

| | | | |
|---|---|---|---|
| *மேற்கு* | *09* | *தெற்கு* | *01* |
| *சப்ரகமுவ* | *05* | *வடமேல்* | *02* |
| *மத்தி* | *04* | *ஊவா* | *01* |
| *வடக்கு* | *02* | | |

## 8.14 பாட இணை வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வேலைத்திடடங்கள்

பாட இணை மற்றும் பாடத்துக்கு இணைவான செயற்பாடுகள் ஊடாக சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் சமூகத் திறமைகளை விருத்தி செய்வதற்காக பாடசாலையில் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2011 ஆம் ஆண்டில் அகில இலங்கை டவர் ஹோல் நாடகப் போட்டி 150 பாடசாலைகளின் மாணவ மாணவிகள் 1500 பேர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.
- 1000 ஆசிரியர்கள் மற்றும் 2500 மாணவர்களின் பங்கேற்புடன் போதைப்பொருள் தடுப்புப் போட்டித் தொடர் நடாத்தப்பட்டது.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு போதைப்பொருள் பயன்பாட்டின் பாதிப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்துவதற்காக போதைப்பொருள் தடுப்பு மத்திய நிலையமும் புற்று நோய் தடுப்பு மத்திய நிலையமும் 4ட்டாக இணைந்து 200 பாடசாலைகள் மற்றும் 17 தேசிய கல்விக் கல்லூரிகளில் 25 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- 6000 பாடசாலைகளில் மனோவியல் சமூக தலையீட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- கல்வி ஆலோசனைச் சேவைகளை பாடசாலை மட்டத்தில் சகல கல்லூரிகளிலும் அமுல்படுத்தல்.
- பாடசாலை தொழிற்சாலை வழிகாட்டல் சேவை 1AB மற்றும் 1C 2700 பாடசாலைகளில் அமுல்படுத்தல்.
- “சௌகசக்க தக்சலா”,“தெனுவர மித்துரு” மற்றும் “மாணவர் பாராளுமன்றம்” வேலைத்திட்டத்தை அமுல்படுத்தி அதன் மூலம் சிறார்களுக்கிடையே சமாதனம் மற்றும் சமூக நல்லுறவினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 8.15 பாடசாலை நூலக அபிவிருத்தி

சமூக நட்புறவு, ஒழுக்க விழுமியம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கம் கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கான அத்தியவசிய கற்றல் தேர்ச்சியினை எட்டுவதற்கு வாசிக்கும் பழக்கத்தினை மாணவர் மத்தியில் விருத்தி செய்ய வேண்டும் என்பதனால் பாடசாலை நூலகங்களை விருத்தி செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- பாடசாலை நூலகங்களை பயன்மிக்கதாக பயன்படுத்துவது தொடர்பாக அதிபர்கள், நூலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக ஏழு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- சகல மாகாணங்களிலும் மாதிரி வாசிப்பு முகாம்கள் மற்றும் வாசிப்பினை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு 341 பாடசாலைகளுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன.
- தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து தொலைக்காட்சி மற்றும் வானொலிக் கல்வி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.
- 150 தேசிய பாடசாலைகளுக்காக நூலக தளபாடங்களை விநியோகிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- தேசிய பாடசாலைகளுக்காக ஆலோசனைக் கோவைகள் தயாரிக்கப்பட்டன.

## 8.16 ஊட்டல் கல்வியின் மூலம் “சகலருக்கும் கல்வி” சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்

மாணவர்களின் தேசிய, சமய அல்லது மொழி மாற்றங்கள் மூலம் அமைவிட ரீதியிலான மட்டங்களைக் கருத்திற் கொள்ளாது கல்விக்கான சம சந்தர்ப்பங்களை வழங்குவது அரசின் கொள்கையாகும். “சகலருக்கும் கல்வி” நோக்கை எட்டுவதனை உறுதி செய்யும் வகையில் ஊட்டல் கல்வியின் பிரவேசத்தை பாடசாலைகளுக்கு அமுல்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- சொரணாதொட்ட, கந்தகெட்டிய, மீககஹிவுல மற்றும் மன்னார் கல்விக் கோட்டங்களின் ஊட்டல் கல்வி உபகரணங்களின் மேற்பார்வை மற்றும் மேம்படுத்தப்பட்டன.
- ஆரம்பத்தின் முதல் பருவத்தில் ஆசிரியர்களின் ஊட்டல் கல்விக்காக பயிற்சியளிக்கும் மொடியுல் மற்றும் இலத்தரனியல் கற்கை பெக்கேஜ் தயாரிக்கப்பட்டது.

## 8.17 தேசிய பாடசாலை அபிவிருத்தி

கல்வி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் அமுலில் உள்ள 340 பாடசாலைகள் தேசிய பாடசாலைப் பிரிவின் கீழ் அடங்குகின்றன.

- 338 தேசிய பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான பண்புசார் உள்ளீடுகளைக் கொள்வனவு செய்ய 12.65 மில்லியன் ரூபா நிதி 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது.
- 75 தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்கள் வழங்கப்பட்டன.
- நிதி முகாமைத்துவம் தொடர்பாக அதிபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டன.

## 8.18 வட மாகாணக் கல்வி அபிவிருத்தி

வட மாகாணத்தின் மோதல்களினால் இடம்பெயர்ந்து கல்வியில் பின்னடைவுகளை எதிர்கொண்ட பிள்ளைகளின் கல்வியினை மீளச் சிறந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்க வட மாகாண அபிவிருத்தி ஜனாதிபதி செயலணி மற்றும் வட மாகாண பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

- 2011 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள் மாகாண கல்விக் கட்டமைப்புக்களின் ஊடாக அமுல்படுத்தப்பட்டன.
- இதற்கிடையே கல்வி அமைச்சினால் 26 அதிபர்கள் மற்றும் 13 பிரதி அதிபர்களுக்காக முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள் 26 பேர்களுக்கான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 8.19 தோட்டப் பாடசாலை அபிவிருத்தி

தோட்டப் பாடசாலைகளின் கல்விப் பிரவேசம் மற்றும் பண்புசார் கல்வியை விருத்தி செய்வதற்காக உரிய ஏனைய அமைச்சுக்களுடன் இணைந்து பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதுவரையில் குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்களை எட்டியுள்ள போதிலும் தொடர்ந்தும் காணப்படும் கல்வியின் அடைவு மட்டம் மற்றும் வள முரன்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- மத்திய, ஊவா, மேற்கு மற்றும் தென் மாகாணங்களின் தோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வியினை மேம்படுத்த ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- அத்துடன் மத்திய, சப்ரகமுவ, ஊவா, மேற்கு மற்றும் தென் மாகாணங்களின் தோட்டப் பாடசாலைகளின் இடைநிலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை மேம்படுத்த ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தோட்ட மாணவர்களுக்காக மனோவியல் சமூக ஆலோசனைகள் மற்றும் சுகாதாரக் கல்வியை வழங்க பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 8.20 முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி

முஸ்லிம் தேசிய அடையாளம், கலாச்சாரம் மற்றும் சமயப் பெறுமதிகளைப் பாதுகாத்து தேர்ச்சியினை விருத்தி செய்வதன் மூலம் கல்வியின் நோக்கங்களை எட்டுவதற்காக முஸ்லிம் மாணவ மாணவிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க கல்வி அமைச்சினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 94 முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்காக கொள்ளளவு விருத்தி மற்றும் தொழில் முயற்சி பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- முஸ்லிம் பாடசாலை நூலகங்களுக்காக மேலதிக வாசிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.
- வட மாகாணத்தின் முஸ்லிம் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளுக்காக கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் கிளையொன்றைத் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள் குடியமர்த்தும் போது அக்குடும்பங்களின் சிறார்களின் கல்வியை மேம்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.
- 1000 பாடசாலைச் செயற்றிட்டத்திற்குரிய முஸ்லிம் பாடசாலைகளில் அரபு மொழியை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய வங்கிகள் மற்றும் நிதிச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- குறைந்த அடைவு மட்டங் கொண்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கு சுய கற்கை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## 8.21 தமிழ் மொழி மூல பாடசாலை அபிவிருத்தி

அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்காக தமிழ் மொழி மூல மாணவர்களின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையில் தமிழ் மொழி மூல பாடசாலை அபிவிருத்திக்கு கல்வி அமைச்சினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- தமிழ் மொழி மூல பாடசாலைகளில் காணப்படும் பிரதான எட்டுப் பிரச்சினைகளை இனங்கண்டு அது சார்ந்த செலவினங்களை அனுப்புவதற்காக சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

- 1000 பாடசாலைச் செயற்றிட்டத்தின் கீழ் 75 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக கொள்ளளவு விருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 8.22 முறைசாராக் கல்வி

பல்வேறுபட்ட காரணங்களினால் பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களைக் கொண்டு முதியோருக்கு மாற்றுக் கல்வியினை வழங்குவதற்காக இவ்வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் எழுத்தறிவு வேலைத்திட்டங்கள், தேர்ச்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பின்னூட்டல் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

| வேலைத்திட்டங்கள் | 2011 இன் முன்னேற்றங்கள் |
|---|---|
| சமூக கற்கை வேலைத்திட்டங்கள் | 171 மத்திய நிலையங்களில் அமுலில் உள்ள. 50 ஆலோசகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். |
| தொழில் முயற்சிக் கல்வி | 100 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. |
| செயற்பாடுகள் இணைந்த கற்கை மத்திய நிலையம் | 66 மத்திய நிலையங்கள் அமுலில் உள்ளன. 60 ஆலோசகர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. |
| தெருச் சிறார்களுக்கான வேலைத்திட்டம் | 220 பிள்ளைகளுக்கு கல்விக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. |
| முறைசாரா ஆலோசகர்களின் கொள்ளளவு விருத்தி | 50 ஆலோசகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. |
| எழுத்தறிவு வேலைத்திட்டங்கள் | சிங்களம், தமிழ் மற்றும் கணிதத்துக்காக ஆசிரிய ஆலோசனைக் கோவைகள் தயாரிக்கப்பட்டன. 90 ஆலோசகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. |

## 8.23 விசேட கல்வி

விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கல்விக்காக ஊட்டல் கல்வியினை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்துடன் சாதாரணமாக பாடசாலைக்கு சேர முடியாத பிள்ளைகளுக்காக விசேட வசதிகள் கொண்ட கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

- விசேட தேவைகள் கொண்ட ஆசிரியர்களின் கல்வி அபிவிருத்திக்காக தேசிய மற்றும் மாகாண மத்திய நிலையங்களைத் தாபிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- விசேட தேவைகள் கொண்ட சிறார்களின் ஆளுமை விருத்திக்காக 25 மாணவர் முகாம்கள் நடாத்தப்பட்டன.
- கட்புலன் மற்றும் செவிப்புலன் குன்றியோரின் பிள்ளைகள் கேட்டல் கருவிகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் கல்விக்கான பங்கேற்பினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட வசதிகளை விருத்தி செய்து கட்டிடங்களை நவீன மயப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- பிறெய்ல் பாடநூல்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக பிறெய்ல் அச்சகத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# அத்தியாயம் 9 :
# கல்வியின் பண்புசார் விருத்தி மற்றும் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தல்

## 9.1 பாடசாலை மதிப்பீடு மற்றும் மேற்பார்வை

கல்வி அமைச்சு, மாகாணப் பொறுப்பாளர்களுடன் இணைந்து கல்வியின் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலை மதிப்பீடு மற்றும் மேற்பார்வை வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. பாடசாலை சுய மதிப்பீடு மற்றும் வெளி மதிப்பீடு என பிரதான இரண்டு உள்ளீடுகள் ஊடாக இவ்வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி பாடசாலைப் பண்புசார் சுட்டியினை சகல பாடசாலைகளுக்குமாகத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

| வேலைத்திட்டங்கள் | 2011 இன் முன்னேற்றங்கள் |
|---|---|
| **அதிபர்கள் மற்றும் வலயப் பணிப்பாளர்களின் பாடசாலை சுய மதிப்பீடுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்** | நிட்டம்புவ - 156, இப்பாகமுவ - 125<br>நிவித்திகல - 139, தெல்தெனிய - 57 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன |
| **பாடசாலை வெளி மதிப்பீடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல்** | மேற்கு,ஊவா, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களின் 55 மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன |
| **கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை மேற்பார்வைகள்** | எஸ்.டப்ளியூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க கல்லூரி, வெயாங்கொட<br>அல்-மதீனா தே.பா., சியம்பலாகஸ்கொடுவ<br>ரஜவெல இந்து தேசிய பாடசாலை<br>அளுத்கம மத்திய மகா வித்தியாலயம்<br>ஜே.ஆர். ஜெயவர்தன ம.ம.வி., பண்டுவஸ்நுவர<br>சேனாநாயக்க ம.ம.வி, மாதம்பே<br>சுஜாதா கல்லூரி, மாத்தறை |

## 9.2 கல்வி ஆராய்ச்சி

கொழும்பு பல்கலைக்கழக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு மத்திய நிலையத்தினால் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பருவங்களின் பல பிரதான பாடங்களுக்காக காலத்துக்கு ஒரு முறை கற்றல் பயன்பாடுகள் தொடர்பான தேசிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மதிப்பீட்டின் பயனை விரிவான அடிப்படையில் விநியோகிக்க மற்றும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்காக பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சகல பாடத்துறைகளிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள மற்றும் அத்தகவல்களின் பயன்பாட்டினை ஊக்குவித்து அறிவுறுத்தவும் பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 9.3. கல்வியின் முகாமைத்துவ தகவல் முறைமை(EMIS)

கல்வியின் பண்புசார் விருத்தியினை உதவி செய்யும் வகையில் கொள்கை வகுப்பதற்காக தகவல் மற்றும் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்துவதனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வருடாந்த பாடசாலை புள்ளிவிபரங்களின் மூலம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் விளக்கமான கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை அமைச்சில் தாபிக்கப்பட்டுள்ளது.

- 2011 ஆம் ஆண்டில் சகல அரச பாடசாலைகளிலும் பௌதீக வள மேற்பாார்வைகளை மேற்கொண்டு கணினி மயப்படுத்தப்பட்டன.
- சகல ஆசிரியர்களினதும் தகவல்கள் கணினி மயப்படுத்தப்பட்டன.
- 2011 ஆம் ஆண்டில் வட மாகாணத்தின் பாடசாலை வரைபடங்களினைப் பூர்த்தி செய்வதற்கும் நாட்டின் சகல பாடசாலைகளிலும் வரைபினை உள்ளடக்கி பூகோள தகவல் முறைமை (GIS) உள்ளடக்கப்பட்டுள்ளது.